REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 ஜூலை 20 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 169 | Wednesday 20, July, 2022 | 28பக்கங்கள் | 40/-

ஜனாதிபதி தெரிவு குறித்து தமிழ் மக்கள் சிந்தனைக்கு

ஐயப்பதாச சாம்பசிவ குருக்கள் கருத்து

பாராளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு எதிர்காலத் தீர்வுக்கான கூடிய திறமை கொண்ட வேட்பாளருக்கு 06

இறுதி நேரத்தில் விலகிக்கொண்ட சஜித்;

ஜனாதிபதி பதவிக்கு மும்முனை போட்டி

ரணில், டளஸ், அனுரகுமார களத்தில்

இரகசிய வாக்கெடுப்பின் மூலம் இன்று புதிய ஜனாதிபதி தெரிவாவார்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

வெற்றிடமாகவுள்ள ஜனாதிபதிப் பதவிக்கு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் நேற்று (19) பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டுள்ளது. பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் 06

வாக்களிக்குமாறு வற்புறுத்தவோ, செல்வாக்கு செலுத்தவோ கூடாது

வாக்குச்சீட்டை படம் பிடித்தால் அமர்விலிருந்து 07 ஆண்டுகள் தடை

சபாநாயகர் பாராளுமன்ற அலுவலகத்துக்கு அறிவிப்பு

பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது வாக்குச் சீட்டுகளை படம் எடுக்கக் கூடாது. இன்றைய ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு குறிப்பிட்ட வேட்பாளருக்கும் வாக்களிக்குமாறு வற்புறுத்தவோ அல்லது செல்வாக்கு செலுத்தவோ கூடாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று பாராளுமன்ற அலுவலகத்துக்கு அறிவித்துள்ளார்.

எந்த வேட்பாளருக்கு வாக்களித்தோம் என்பதை நிரூபிப்பதற்காக இன்று வாக்குச் சீட்டை படம் எடுக்குமாறு சில கட்சித் தலைவர்கள் தங்கள் எம்.பி.க்களுக்கு அறிவித்துள்ளதாக நேற்று முற்பகல் 06

ஆகஸ்ட் 01ஆம் திகதி முதல்

வெளிநாட்டு தபால் கட்டணம் அதிகரிப்பு

03

தேசிய பட்டியல் நியமன சட்ட சிக்கல்;

ரணிலுக்கு எதிரான வழக்கு உயர் நீதிமன்றால் தள்ளுபடி

அடிப்படை உரிமை மீறல் மனு நிராகரிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்ற உறுப்பினராக நியமித்தமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

நீதியரசர்களான காமினி அமரசேகர ஷிரான் குணரத்ன மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர் குழாம், இந்த மனுவை நிராகரித்துள்ளது.

காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்ட மனு உள்ளிட்ட பல காரணங்களை கருத்திற் கொண்டு இந்த மனுவைத் தொடர்வதற்கு அனுமதி வழங்க நீதிமன்றம் மறுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, 06

பாடசாலைகளுக்கான விடுமுறை ஜூலை 25 திங்கள் வரை நீடிப்பு

கல்வி அமைச்சு நேற்று அறிவித்தல் விடுப்பு

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற அனைத்து பாடசாலைகளுக்கான விடுமுறை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. அதன்படி எதிர்வரும் ஜூலை 25 திகதி திங்கட்கிழமை பாடசாலைகள் மீள திறக்கப்படுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னதாக நாளை 21 ஆம் திகதி பாடசாலைகளை மீள திறக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், எரிபொருள் மற்றும் போக்குவரத்து நெருக்கடிகளை கருத்திற்கொண்டு விடுமுறை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

கைலாகு கொடுத்து தமக்கிடையே

வாழ்த்துக்களை பரிமாறிய ஜனாதிபதி வேட்பாளர்கள்

சபையில் சக MPக்களுடனும் உரையாடல்

லோரன்ஸ்செல்வநாயகம்,ஷம்ஸ்பாஹிம்

ஜனாதிபதி தெரிவுக்கான வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டு பாராளுமன்றம் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டதுடன் நேற்று வேட்பாளர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் கைலாகு கொடுத்து வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டனர்.

10 நிமிடங்களே பாராளுமன்றம் கூடியதோடு சபை 06

அமைதியான முறையில் வாக்களிப்பு;

சபாநாயகரின் கோரிக்கை கட்சித்தலைவர்கள் ஏற்பு

03

ஜனாதிபதி பதவி போட்டியிலிருந்து விலகியது ஏன்?

நாடு மற்றும் நாட்டு மக்களின் நலனுக்காகவே விலகினேன்

03

இலங்கை பொருளாதாரத்தை மீட்க இந்தியா உதவியளிக்கும்

விரைவான செயற்பாடுகள் முன்னெடுப்பு - கோபால்

இலங்கைக்கு விரைவான மற்றும் பயனுள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்க இந்தியா உதவுமென கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் மாற்றம் சுமுகமாக இருக்க வேண்டுமென இந்தியா விரும்புகிறதென உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார். இலங்கைக்கு சுமார் 04 பில்லியன் டொலர் உதவிகளை வழங்கிய இந்தியா, 06

எரிபொருள் அனுமதி சீட்டு;

யாழ். நகரில் QR Code தயாரித்து விற்பனை

யாழ்.விசேட நிருபர்

எரிபொருளுக்கான தேசிய பாஸ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதையடுத்து, யாழ்ப்பாணத்தில் இதனை அடையாள அட்டை போன்றும் , கீ டேக் போன்றும் தயாரித்துக் கொடுத்து கட்டணம் அறவிட்டு வருகின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள ஒருவர் 06

நேற்று நள்ளிரவு முதல் குறைந்த பட்ச பஸ் கட்டணம் ரூ.38 ஆனது

பெற்றோல், டீசல் விலைக்குறைப்பைத் தொடர்ந்து பஸ் கட்டணமும் 2.23 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளதாக தேசிய போக்குவரத்து 06

கூட்டமைப்பின் சில எம்.பிக்கள் ரணிலுக்கு ஆதரவளிக்க முடிவு

சார்ள்ஸ், வினோ, கோவிந்தன் தீர்மானம்

03

ஜனாதிபதி பதவி போட்டியிலிருந்து விலகியது ஏன்?

நாடு மற்றும் நாட்டு மக்களின் நலனுக்காகவே விலகினேன்

03

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில்

நீதிமன்ற கட்டளையை அமுல்படுத்துவதில் சிக்கல்

பொலிஸார் நகர்த்தல் பத்திரம் தாக்கல்

முல்லைத்தீவு குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தின் கட்டளையை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் எழுந்துள்ளது. இது தொடர்பில் பொலிஸார் நகர்த்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்துள்ளனர். முல்லைத்தீவு, குருந்தூர் மலையில் 06

ஜனாதிபதியை தெரிவு செய்யும் முறைமை;

சம அளவில் வாக்குகள் பெறின் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு

50 வீத வாக்குகள் பெறாவிடினும் தெரிவுக்கு விசேட ஏற்பாடு

லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்

ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பு இன்று பாராளுமன்றத்தில் நடைபெற உள்ளதோடு வேட்பாளர்கள் ஒரே அளவான 06

தடுப்பூசியை பெற்றதால் பெரிதாக பாதிப்பில்லை

கொரோனாவிலிருந்து மீண்ட ஸ்டாலின் கருத்து

03

இலங்கை தமிழர் 07 பேர் தனுஷ்கோடியில் தஞ்சம்

யாழிலிருந்து கடல்வழியாக சென்றுள்ளனர்

யாழ்.விசேட நிருபர்

இலங்கையிலிருந்து இரண்டு குடும்பங்களை சேர்ந்த 07 பேர் கடல் வழியாக தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இலங்கையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட 07 பேர் தனுஷ்கோடிக்கு அருகிலுள்ள ஐந்தாம் மணல் 06

தேசிய எரிபொருள் அனுமதி பெற்றவர்களுக்கு அறிவுறுத்தல்

ஒதுக்கீடு பற்றி அறிய விசேட முறைமை

தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திரத்துக்கு பதிவு செய்தவர்கள் எரிபொருள் ஒதுக்கீடு தொடர்பில் அறிந்து கொள்வதற்காக விசேட முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, FUEL BAL மற்றும் உங்கள் வாகன எண்ணை (உதாரணமாக ABC 1234) டைப் செய்து 076 6220 000 என்ற எண்ணுக்கு SMS அனுப்புவதன் மூலம் இதனை அறியும் வாய்ப்பை வழங்குகிறது. இதன்படி FUEL<இடைவெளி> BAL< இடைவெளி> உங்கள் வாகன எண்ணை டைப் செய்து SMS அனுப்ப வேண்டும். 06

பிரிட்டன் பிரதமர் பதவிக்கான போட்டி

ரிஷி சுனக் தொடர்ந்தும் முதலிடம்

பிரிட்டனின் கன்சர்வேடிவ் கட்சியின் தலைமைப் பதவி மற்றும் பிரிட்டன் பிரதமர் பதவிக்கான டோரி எம்.பிகளின் மூன்றாம் சுற்று வாக்கெடுப்பில் முன்னாள் நிதி அமைச்சர் ரிஷி சுனக் முதலிடம் பிடித்துள்ளார்.

எவ்வாறாயினும், குறைவான வாக்குகளை பெற்ற பின்வரிசை உறுப்பினர் டொம் துகென்தாட், இந்த போட்டி களத்திலிருந்து வெறியேற்றப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் பென்னி மோர்டான்ட் இரண்டாவது இடத்தையும், வெளியுறவு செயலாளர் லிஸ் ட்ரஸ் மூன்றாவது இடத்தையும், 06

படகு கவிழ்ந்ததில் 21 பெண்கள் பலி

பாகிஸ்தானில் பரிதாப நிகழ்வு

பாகிஸ்தான் பஞ்சாப் மாநிலத்தில் திருமணத்துக்கு 100 பேருடன் சென்ற படகு ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 21பேர் உயிரிழந்துள்ளனர். காணாமல்போனவர்களை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலம் ரஹிம் யார் கான் மாவட்டம் மோட்ச்கா பகுதியை சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் ராஜன்பூர் பகுதியில் நடந்த திருமண நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு படகில் வீடு 06

சர்வதேச செய்திகள்

ஐரோப்பாவை வாட்டிவரும் பயங்கர வெப்பம்: கட்டுக்கடங்காத காட்டுத் தீ

பல நாடுகளிலும் அபாய எச்சரிக்கை

கடுமையான வெப்ப அலை வடக்கை நோக்கி நகரும் நிலையில் மேற்கு ஐரோப்பா பயங்கர வெப்பநிலையை எதிர்கொண்டுள்ளது.

பிரான்ஸ் மற்றும் பிரிட்டனில் அதீத வெப்பம் பற்றி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதோடு வடக்கு ஸ்பெயினில் கடந்த திங்கட்கிழமை இதுவரை காணாத 43 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவானது.

பிரான்ஸ், போர்த்துக்கல், ஸ்பெயின் மற்றும் கிரேக்கத்தில் தொடரும் காட்டுத் தீ காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பிரிட்டன் நேற்றும் முன்னர் காணாத கடும் வெப்பத்தை சந்தித்ததோடு பிரான்ஸின் சில பகுதிகளில் "பேரழிவு வெப்பம்" பதிவாகும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

பிரான்ஸின் பல பகுதிகளில் கடும் வெப்பம் பதிவானதோடு மேற்கு நகரான நன்டஸில் 42 டிகிரி செல்சியஸ் சுட்டெரிக்கும் வெப்பம் பதிவானதாக தேசிய காலநிலை அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

காட்டுத் தீ சம்பவங்களால் அண்மைய நாட்களில் 30,000க்கும் அதிகமானோர் வெளியேற்றப்பட்டிருப்பதோடு வெளியேறுபவர்களுக்காக அவசர முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தென்மேற்கில் உள்ள பிரபல சுற்றுலா தளமான கிரொன்டே கடும் பாதிப்பை சந்தித்துள்ளது. இங்கு கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் சுமார் 42,000 ஏக்கர் நிலப்பகுதியை அழித்திருக்கும் காட்டுத் தீயை கட்டுப்படுத்த தீயணைப்புப் படையினர் போராடி வருகின்றனர்.

"அது பற்றி நினைக்கும்போது பயங்கரமாக உள்ளது" என்று கிரொன்டே பிராந்தியத்தின் தலைவர் ஜீன் லுக் கிளைசே, தீ பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

"வெப்பநிலை, காற்று, வானில் போதிய நீர் இல்லாததால் இது இராட்சத ஒக்டோபஸ் போன்று, முன்னால் மற்றும் பின்னால் என இரு பக்கங்களாலும் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. அதற்கு எதிராகப் போராடுவது மிகக் கடினமாக உள்ளது" என்றும் அவர் விபரித்துள்ளார்.

மறுபுறம் பிரிட்டனில் கடந்த இரு தினங்களாக முன்னர் காணாத கடும் வெப்பநிலை பதிவாகி வருகிறது. அங்கு சில பகுதிகளில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸை தாண்டி இருப்பதாக கூறப்படுகிறது.

இதனால் பல ரயில் பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டதோடு லண்டனின் லுடன் விமானநிலையத்தின் ஓடுபாதை வெப்பத்தால் உருகிய நிலையில் விமானப் பயணங்களும் இடைநிறுத்தப்பட்டதால் பயண இடையூறுகளும் ஏற்பட்டன.

கடந்த திங்களன்று நெதர்லாந்தில் இந்த ஆண்டின் வெப்பமான நாள் பதிவானது. தென் மேற்கில் வெஸ்ட்ரொப் நகரின் வெப்பநிலை 33.6 செல்சியஸாக பதிவானது. அங்கு மேலும் வெப்பநிலை அதிகரிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடும் வெப்பத்தின் விளைவாக அண்மைய நாட்களில் ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கலில் 1,000க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று வெப்பநிலை 47 செல்சியஸாக இருந்தது. இது ஜூலை மாதத்தில் சாதனை அளவு ஒன்றாக இருந்தது. பெரும்பாலான பகுதிகள் உச்ச தீ ஆபத்துக் கொண்ட இடங்களாக தேசிய வானிலை அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தீ ஆபத்துக் காரணமாக வடக்கு முர்கா மாநகரில் இருந்து 300 பேர் வெளியேற்றப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த 2017 இல் இடம்பெற்ற அனர்த்தம் போன்ற சூழலைத் தவிர்க்க நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த ஆண்டு காட்டுத் தீயினால் 66 பேர் உயிரிழந்தனர்.

ஸ்பெயினில் குறைந்தது 20 காட்டுத் தீ சம்பவங்கள் கட்டுக்கடங்காது பரவி வருகின்றன.

இத்தாலி தீபகற்பம் எங்கும் கடும் வெப்பம் தாக்கியுள்ளது. நாட்டின் வடக்குப் பகுதியில் பல மாதமாகச் சந்தித்து வந்த வரட்சி மேலும் மோசமாகியுள்ளது. இரண்டு வாரத்துக்கு முன் வெப்பத்தால் பனிப்பாறை உடைந்ததில் குறைந்தது 11 பேர் உயிரிழந்தனர்.

ஐரோப்பாவில் வெப்பநிலை மேலும் மோசமடையும் என்று வானிலை ஆய்வகம் அஞ்சுகிறது.

மனித செயற்பாடுகளால் ஏற்பட்ட காலநிலை மாற்றம் காரணமாக வெப்ப அலைகள் அடிக்கடி நிகழும் ஒன்றாக மாறியுள்ளது. கைத்தொழில் சகாப்தம் ஆரம்பித்தது தொடக்கம் உலகம் ஏற்கனவே சுமார் 1.1 செல்சியஸ் வெப்பமடைந்துள்ளது. அரசுகள் உமிழ்வுகளில் அதிரடியான குறைப்புகளை மேற்கொள்ளாவிட்டால் வெப்பநிலை மேலும் அதிகரிக்கும் அச்சுறுத்தல் உள்ளது.

சுவீடன், பின்லாந்து நேட்டோவில் இணைய தொடர்ந்தும் நெருக்கடி

துருக்கி ஜனாதிபதி ரிசப் தயீப் எர்துவான், நேட்டோவில் சேரும் சுவீடன், பின்லாந்து நாடுகளின் முயற்சியைத் தடுக்கப் போவதாக மீண்டும் ஒருமுறை எச்சரித்துள்ளார்.

துருக்கியின் நிபந்தனைகளுக்கு நேட்டோ கட்டுப்பட்டால்தான் அந்நாடுகளைச் சேர்க்க முடியும் என்று அவர் கூறினார்.

நேட்டோ இராணுவக் கூட்டணியில் தற்போது முப்பது நாடுகள் உள்ளன. புதிதாக நாடுகள் அதில் சேர வேண்டுமானால் எல்லா உறுப்பு நாடுகளும் அதை ஏற்க வேண்டும்.

சுவீடனும் பின்லாந்தும் குர்தியப் போராளிகளுக்கு அடைக்கலம் தருவதாகத் துருக்கி குற்றஞ்சாட்டுகிறது.

ரஷ்யா, ஈரான், துருக்கி ஆகிய மூன்று நாடுகளும் சந்திக்கும் உச்சநிலைக் கூட்டத்துக்கு முன் செய்தியாளர்களிடம் பேசிய எர்துவான், தடை செய்யப்பட்ட குர்திஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்த தீவிரவாதிகளுக்கு சுவீடனும் பின்லாந்தும் அடைக்கலம் தருவதாக குறிப்பிட்டன.

அமெரிக்க வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் நெட் பிரைஸ் எர்துவானின் கருத்துக் குறித்து நேரடியாகப் பதில் கூற மறுத்துவிட்டார்.

பாகிஸ்தானில் படகு மூழ்கி 20 பேர் பலி: 30 பேர் மாயம்

மத்திய பாகிஸ்தானின் நதி ஒன்றில் 100க்கும் அதிகமானோரை ஏற்றிய படகு ஒன்று மூழ்கியதில் குறைந்தது 20 பேர் உயிரிழந்திருப்பதோடு மேலும் 30 பேர் காணாமல் போயுள்ளனர்.

சாதிகாபாத் மாவட்டத்தில் இந்துஸ் நதியில் கடந்த திங்கட்கிழமை மூழ்கிய இந்தப் படகில் இருந்தவர்கள் திருமண வைபவம் ஒன்றுக்கு பயணித்தவர்கள் என்று கூறப்படுகிறது.

இதன்போது 90 பேர் மீட்கப்பட்டதோடு பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர். படகில் இருந்த அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று அரசு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

"இதுவரை 20 சடலங்களை மீட்டுள்ளோம்" என்றும் பெரும்பாலானவர்கள் பெண்கள் என்றும் உள்ளூர் அரச அதிகாரியான அஸ்லம் தஸ்லீம் தெரிவித்துள்ளார். "சரியாக எத்தனை பேர் படகில் இருந்தார்கள் என்பது எமக்குத் தெரியாதுள்ளது. குடும்ப உறுப்பினர்கள் கூறிய கணக்கை வைத்தே நாம் எண்ணிக்கையை கணித்திருக்கிறோம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷரீப் தனது ட்விட்டரில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அனுதாபத்தை வெளியிட்டுள்ளார்.

சூரிய புயல் எச்சரிக்கை

சூரிய புயல் பூமியை தாக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக நாசா விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

சூரிய புயல்களை பூமியின் காந்தபுலம் ஓரளவு தடுத்தாலும் சிறிய அளவிலான பாதிப்புகள் ஏற்படுகின்றன. கடந்த சில நாட்களாக பூமியின் வளிமண்டலத்தை சக்திவாய்ந்த சூரிய புயல் தாக்க உள்ளதாக நாசா விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர். இந்நிலையில் இலங்கை நேரப்படி வீரியமிக்க சூரிய புயல் பூமியை தாக்க வாய்ப்புள்ளதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சூரிய புயல் தாக்கத்தால் செயற்கைக்கோள்கள் செயல்பாடுகள் பாதிக்கும் என்பதால் ஜி.பி.எஸ் உள்ளிட்ட தொலைதொடர்பு சேவைகள் பல இடங்களில் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு ஆயுத உதவி

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு அமைச்சர்கள் உக்ரைனுக்குக் கூடுதல் இராணுவ உதவியை வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளனர்.

500 மில்லியன் டொலர் மதிப்புள்ள ஆயுத உதவி வழங்க அவர்கள் இணங்கினர். பெப்ரவரி மாதம் போர் ஆரம்பித்தது முதல் உக்ரைனுக்கு ஐரோப்பிய ஒன்றியம் இதுவரை இரண்டரை பில்லியன் டொலர் உதவியைக் கொடுத்துள்ளது.

ரஷ்யாவுக்கு எதிராகக் கூடுதல் தடைகளை விதிப்பது பற்றியும் ஐரோப்பிய ஒன்றிய அமைச்சர்கள் பேசினர்.

இதற்கிடையே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உலக நாடுகளிடம் இருந்து ரஷ்யாவைத் தனிமைப்படுத்திவிட முடியாது என்று கூறியுள்ளார். எனினும் அப்படியொரு நிலைமை வந்தால் அதைச் சமாளிக்கத் தயாராக இருக்கும்படி ரஷ்ய மக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

ஈரானின் மிக அழகான பள்ளிவாசலுக்கு சேதம்



தலைசிறந்த கட்டடக்கலைகளில் ஒன்றாகப் போற்றப்படும் ஈரானின் 17ஆம் நூற்றாண்டு பள்ளிவாசல் ஒன்று புனரமைப்பு பணியின்போது சேதமடைந்திருப்பதை அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இஸ்பஹான் நகரில் இருக்கும் ஷாஹ் பள்ளிவாசல் ஈரானில் இருக்கு அழகான கட்டடம் என்று கருதப்படுவதோடு அது ஐக்கிய நாடுகளின் உலக மரபுரிமைத் தலங்களில் ஒன்றாகவும் உள்ளது.

எனினும் அண்மையில் எடுக்கப்பட்ட படங்களில் பள்ளிவாசலின் ஒரு பக்கம் சீரற்று காணப்படுவதோடு, அதன் தனித்துவமான மலர் வடிவங்கள் பொருத்தமற்று காணப்படுகின்றன.

இதில் குறைபாடுகள் இருப்பதை அதிகாரிகள் கண்டறிந்திக்கும் நிலையில் அதனை சரி செய்ய முடியும் என்று தெரிவித்துள்ளனர்.

"பணிகள் இன்னும் பூர்த்தியாகவில்லை" என்று இந்தத் திட்டத்தின் மீளமைப்பாளரான மெஹ்தி பக்தல் தெரிவித்துள்ளார்.

177 அடி உயரமான குவிவு மாடத்தால் ஏற்படும் சவால்கள் மற்றும் பயன்படுத்தப்படும் நிலைச்சட்டம் இந்தப் பிரச்சினைக்கு காரணமாகி இருப்பதாக பக்தல் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானின் மூன்றாவது மிகப்பெரிய நகரான இஸ்பஹானின் பொற்காலத்தில் இந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டது.

பிரிட்டன் பிரதமர் பதவிக்கான போட்டியில் சுனக் முன்னிலை

பிரிட்டனின் அடுத்த பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி எம்.பிக்களிடையே கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட 3ஆம் சுற்று வாக்குப் பதிவிலும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முன்னாள் நிதியமைச்சர் ரிஷி சுனக் முதலிடத்தைப் பிடித்தார்.

அவருக்கு ஆதரவாக 115 எம்.பிக்கள் வாக்களித்தனர்.

வர்த்தகத் துறை அமைச்சர் பென்னி மார்டன்ட் 82 வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்தார். வெளியுறவுத் துறை அமைச்சர் லிஸ் டிரஸ் 71 வாக்குகள் பெற்று மூன்றாமிடமும், சமூகநலத் துறை அமைச்சர் கெமி பேடனாக் 58 வாக்குகள் பெற்று 4ஆம் இடமும் பிடித்தனர். கடைசி இடம் பெற்ற வெளிவிவகாரங்களுக்கான சிறப்புக் குழுத் தலைவர் டொம் டுகென்தாட் போட்டியிலிருந்து வெளியேறினார்.

இதன்மூலம் பிரதமர் பதவிக்கான போட்டியாளர்களின் எண்ணிக்கை 4ஆக குறைந்துள்ளது. இறுதி இரு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் வரை எம்.பிக்கள் வாக்களிப்பர். இறுதிச் சுற்றில் கன்சர்வேட்டிவ் கட்சியின் அடிப்படை உறுப்பினர்கள் சுமார் 1.60 இலட்சம் பேர் தபால் மூலம் வாக்களிப்பார்கள். அதில் வெற்றி பெறுபவர் கன்சர்வேட்டிவ் கட்சியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, புதிய பிரதமராக செப். 5ஆம் திகதி பதவியேற்பார்.

தலிபான் அரசு

பெண்களின் வேலைக்கு ஆண் உறவினரை அனுப்ப அழைப்பு

ஆப்கான் நிதி அமைச்சில் பணியாற்றும் பெண் ஊழியர்களுக்கு அவர்களுக்கு பதிலாக வேலைக்கு ஆண் ஊறவினர்களை அனுப்பும்படி தலிபான் நிர்வாகம் கேட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்டில் தலிபான்கள் ஆட்சியை பிடித்தது தொடக்கம், அரச பதவிகளில் இருக்கும் பெண்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டதோடு, எந்த வேலையும் செய்யாமல் இருக்கும் அவர்களுக்கு சம்பளம் கடுமையாகக் குறைக்கப்பட்டே வழங்கப்படுகிறது.

இந்நிலையில் அலுவலகத்தில் வேலைப்பளு அதிகம் இருப்பதால் ஆண் உறவினர் ஒருவரை வேலைக்கு அனுப்பும்படி தலிபான் அதிகாரிகள் அழைப்பு விடுத்ததாக பல பெண்களும், கார்டியன் நாளிதழுக்கு குறிப்பிட்டுள்ளனர்.

நிதி அமைச்சில் 15 ஆண்டுகளாக பணியாற்றும் 37 வயதான மரியம் என்பவருக்கு இவ்வாறான அழைப்பு கிடைத்ததாக குறிப்பிட்டுள்ளார். "அமைச்சில் எனது பதவிக்காக ஆண் உறவினர் ஒருவரின் பெயரைத் தரும்படி அவர்கள் கேட்கிறார்கள். அப்போது என்னை பணி நீக்கம் செய்ய முடியும்" என்றார்.

வர்த்தக முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் பெற்ற தமது இடத்துக்கு மற்றொருவரை இலகுவாக எப்படி பரிந்துரைக்க முடியும்? என்று அவர் கேள்வி எழுப்புகிறார்.

ஹிட்லர் கைக்கடிகாரம் ஏலம்

அடொல்ப் ஹிட்லருக்கு சொந்தமானது என்று கூறப்படும் கைக்கடிகாரம் ஏலத்தில் விடப்படவுள்ளது.

இந்த 'தங்க ஆண்ட்ரியாஸ் ஹூபர் ரிவர்சிபிள்' கைக்கடிகாரம் சுமார் 2–4 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விலை போகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கைக்கடிகாரத்தில் மூன்று திகதிகள் உள்ளன. ஹிட்லருடைய பிறந்தநாள், அவர் ஜெர்மன் நாட்டின் தலைவராக நியமனம் செய்யப்பட்ட நாள், 1933 ஆம் வருடத்தில் நாஜிப்படை தேர்தலில் வென்ற நாள். ஹிட்லரின் இந்த கைக்கடிகாரத்தை அலெக்சாண்டர் ஹிஸ்டோரிகல் என்ற நிறுவனம் ஏலம் விடுகிறது. கைக்கடிகார தயாரிப்பாளர்களும் இராணுவ வரலாற்று ஆசிரியர்களும் இந்தக் கடிகாரத்தின் பின்னணியை ஆராய்ந்து அது ஹிட்லர் தான் வைத்து இருந்தார் என உறுதிப்படுத்தியுள்ளனர். இருப்பினும் அந்தக் கடிகார தயாரிப்பு நிறுவனம் இந்தக் கடிகாரத்தின் சட்டபூர்வமான தன்மையை அங்கீகரிக்கவில்லை என்று தெரிவித்துள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜூலை 20 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

19 முதல் 23 வரை

சுபஹ்	04.41
லுஹர்	12.18
அஸர்	03.43
மஃரிப்	06.32
இஷா	07.47

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் ஆடி 4

ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: மரண யோகம்

திதி: சப்தமி

ஜனாதிபதி, அலரி மாளிகை உட்பட

பிரதமரின் அலுவலகத்தை சேதப்படுத்தியோர் கண்டுபிடிப்பு

சுமார் 70 பேர் பொலிஸாரால் அடையாளம்

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றுக்கு சேதம் ஏற்படுத்தி, அங்கிருந்த பொருட்களை கொள்ளையிட்டமை தொடர்பில் இதுவரையில் சுமார் 70 பேரை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளதாக கூறப்படுகின்றது.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு தீவைத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களும் அதில் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேரடி காணொளி காட்சிகளை சமூக வலைத்தளங்கள் வழியாக காண்பித்து மக்களை தூண்டிய நபர்கள் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல் கட்சிகளுடன் தொடர்புடையவர்களென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமான ஜனாதிபதி 06

போட்டியின்றி ஜனாதிபதி, பிரதமரும் தெரிவு செய்யப்படுவது சிறந்தது

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

போட்டியின்றி ஜனாதிபதி, பிரதமர் தெரிவு செய்யப்படுவதே மிகவும் சிறந்தது. அது முழு உலகுக்கும் முன்னுதாரணமாக அமையுமென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டடத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

இடைக்கால ஜனாதிபதிப் பதவிக்கு மூவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதால், அரசியல் கட்சிகளுக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. ஜனாதிபதிப் பதவிக்கு முன்மொழியப்பட்ட மூவரும் கலந்துரையாடி போட்டியில்லாது ஜனாதிபதி, பிரதமரைத் தெரிவு செய்வதே சிறந்தது.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் அதுவாகவே உள்ளது

பாராளுமன்றத்தில் இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதி தெரிவின்போது எவருக்கு வாக்களிப்பதென்பது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதுவரையில் இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை.

சுதந்திரக் கட்சிக்குள் வாக்கெடுப்பைப் புறக்கணிப்பதற்கும், வாக்களிக்க வேண்டுமென இரு நிலைப்பாடுகள் நிலவுகின்றன.

அதற்கிணங்க மனசாட்சியின்படியே வாக்களிக்க 06

திடீரென அதிகரித்துள்ள கொரோனா தொற்றாளர்

நாளாந்த பதிவில் மீண்டும் அதிகரிப்பு

நாளாந்தம் பதிவாகும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை திடீரென மீண்டும் அதிகரித்துள்ளது.

சுகாதார அமைச்சின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த நாட்களில் நாளாந்தம் சுமார் 06

ஹற்றன் விசேட நிருபர் கே.சுந்தரலிங்கத்தின் தந்தை காலமானார்

எமது ஹற்றன் விசேட நிருபர் கே.சுந்தரலிங்கத்தின் அன்பு தந்தையான பெருமாள் கன்னிகன் நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் இரத்தினபுரி மாவெல தர்மயதன வீதி இல.345/11 என்ற இடத்தை வசிப்பிடமாக கொண்டவர். அன்னாரின் இறுதிக் கிரியை நாளை வியாழக்கிழமை 21.07.2022 மாலை 3.00 மணிக்கு இரத்தினபுரி மாவெல பொது மயானத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காகித பயன்பாட்டுக்கு விடை கொடுக்கும் சுங்கம்

வருடாந்தம் 22 மில். ரூபா சேமிப்பு

இலங்கையில் அலுவலகப் பணிகளில் காகிதத்தைப் பயன்படுத்தாத முதல் துறையாக இலங்கை சுங்கத் திணைக்களம் மாறியுள்ளது.

இது இன்று முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் இதன் மூலம் வருடாந்தம் காகிதம் மற்றும் அது 06

அமைதியான முறையில் வாக்களிப்பு;

சபாநாயகரின் கோரிக்கை கட்சித் தலைவர்கள் ஏற்பு

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக, இன்று பாராளுமன்றத்தில் நடத்தப்படவுள்ள வாக்கெடுப்பை அமைதியான முறையில் நடத்த ஒத்துழைக்குமாறு சபாநாயகர் முன்வைத்த கோரிக்கையை அனைத்து கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

நேற்று பாராளுமன்றத்தில்நடைபெற்ற விசேட கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது, இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வேட்பு மனுக்கோரல் நேற்று நடைபெற்றது.

இதன்படி, பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அலகப்பெரும, அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

நாட்டை மீட்பதற்கான உச்ச அர்ப்பணிப்பை மேற்கொள்வோம்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான அரசாங்கமொன்றை உருவாக்கவும் குறுகிய காலத்தினுள் 19 ஆவது திருத்தத்தை போன்ற திருத்தத்தை முன்வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டை மீட்பதற்கு எம்மால் முடிந்த உச்ச அர்ப்பணிப்பை மேற்கொள்வோமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்,

எதிர்க்கட்சித் தலைவர் அர்ப்பணிப்பு செய்துள்ளார். போராட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்கும் செவிசாய்த்து உடனடியாக நாட்டை அமைதிப்படுத்த வேண்டும். நாடு குறித்து சிந்தித்து ஐக்கிய மக்கள் சக்தி 06

ஜனாதிபதி பதவி போட்டியிலிருந்து விலகியது ஏன்?

நாடு மற்றும் நாட்டு மக்களின் நலனுக்காகவே விலகினேன்

போட்டியிலிருந்து விலகிய சஜித் தெரிவிப்பு

நாட்டுக்காகவும் நாட்டு மக்களின் நலனுக்காகவுமே ஜனாதிபதி பதவிக்கான போட்டியிலிருந்து விலகினேன்.அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியும் , ஐக்கிய மக்கள் கூட்டணியின் பங்காளி கட்சிகளும் டலஸ் அழகப்பெருமவின் வெற்றியை உறுதிப்படுத்துவற்கு கடுமையாக உழைக்கும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலையடுத்து வெற்றிடமாகியுள்ள ஜனாதிபதி பதவிக்கான வேட்புமனு தாக்கல் நேற்று (19) பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடவுள்ளதாக முன்னர் அறிவித்திருந்தார்.

எவ்வாறிருப்பினும் நேற்று அமர்வுகள் ஆரம்பமாவதற்கு சற்று நேரத்துக்கு முன்னர் டுவிட்டர் பதிவொன்றை இட்டு, தான் வேட்புமனு தாக்கல் செய்யப் போவதில்லையென்று அறிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது டுவிட்டர் பதிவில் , ‘ நான் நேசிக்கும் எனது நாட்டினதும் மக்களினதும் நலனுக்காக ஜனாதிபதி பதவிக்கான எனது வேட்புமனு தாக்கல் செய்யும் தீர்மானத்தை வாபஸ் பெறுகிறேன்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் இணைந்து டலஸ் அழகப்பெருமவை வெற்றி பெறச் செய்வதற்கு கடுமையாக உழைப்போம்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆகஸ்ட் 01ஆம் திகதி முதல்

வெளிநாட்டு தபால் கட்டணம் அதிகரிப்பு

வெளிநாட்டு தபால்களுக்கான சேவைக் கட்டணத்தை ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது

தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், வெளிநாட்டு தபால்களுக்கான சேவைக் கட்டணத்தை அதிகரிக்க தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மேலும் நான்கு நாடுகளின் தபால் பொருட்கள் மீதான கட்டுப்பாடு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அமெரிக்க, நெதர்லாந்து, இஸ்ரேல் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு தபால் பொருட்களை ஏற்றுக்கொள்வது இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக இலங்கைக்கான விமான சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள மையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் சில எம்.பிக்கள் ரணிலுக்கு ஆதரவளிக்க முடிவு

சார்ள்ஸ், வினோ, கோவிந்தன் தீர்மானம்

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்கெடுப்பின் போது பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுக் கூட்டம் நடைபெற்றபோதே கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது.

குறிப்பாக சார்ள்ஸ் நிர்மலநாதன், வினோ, கோவிந்தன் கருணாகரம் ஆகியோரே இவ்வாறு வலியுறுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தங்களது அரசியல் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு இந்த தீர்மானத்தை வலியுறுத்தியாக கூறப்படுகின்றது.

அத்துடன், செல்வம் அடைக்கலநாதன், டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளிக்க வேண்டுமென வலியுறுத்தியதாகவும் தகவல்கள் 06

தடுப்பூசியை பெற்றதால் பெரிதாக பாதிப்பில்லை

கொரோனாவிலிருந்து மீண்ட ஸ்டாலின் கருத்து

தமிழக முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்பதற்கு முன்பாகவே, மருத்துவ அறிவியல் மீது முழுமையான நம்பிக்கை வைத்து தடுப்பூசி போட்டுக் கொண்டேன் என்பதால் கொரோனா தொற்று பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லையென தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வெறுமனே இருமலும் சளியும் மட்டும் இருந்ததால், மருத்துவர்களின் அறிவுரையை ஏற்று, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற வேண்டியதாயிற்று என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றிலிருந்து மீண்டு வந்துள்ள தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்களின் அன்பு மற்றும் மருத்துவர்களின் கனிவால் தாம் நலமுடன் பணிகளை தொடர்வதாகவும் மருத்துவமனையிலிருந்து வெளியேறிய தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கடந்த 12 ஆம் திகதி கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து கடந்த 14 ஆம் திகதி சென்னை ஆழ்வார்ப்பேட்டையிலுள்ள காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கடந்த 04 நாட்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அவர் பூரண குணமடைந்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்து தமிழ்நாடு மக்களுக்கும், திமுக தொண்டர்களுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மடல் ஒன்றை எழுதியுள்ளார்.

“கொரோனா தொற்றினால் நான் பாதிக்கப்பட்ட 06

DFCC வங்கி பி.எல்.சி.யின் சகல வாடிக்கையாளர்களுக்குமான அறிவித்தல்

கைவிடப்பட்ட சொத்துக்கள்

2021.12.31 இல் உள்ளவாறான கைவிடப்பட்ட சொத்துக்களின் சட்டபூர்வ அறிக்கையிடல்

வங்கியியல் சட்டத்தின் 72ஆம் பிரிவின் பிரகாரம், வங்கிகளில் வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் பின்வரும் இரண்டு வகையான கணக்குகள்/பொருட்கள் கைவிடப்பட்ட சொத்துக்களில் உள்ளடங்கும்:

- பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு வங்கிக் கணக்கில் எவ்வித செயற்பாடுமின்றி வைக்கப்பட்டிருக்கும் வைப்புக்கள் அல்லது வேறு பணம்.
- வாடகைக் காலம் முடிவடைந்து, வங்கியினால் அது பற்றிய அறிவித்தல் வழங்கப்பட்ட பின் மூன்று வருடங்களுக்குள் மாற்று நடவடிக்கை எதுவும் எடுக்கத் தவறிய வாடிக்கையாளர்களினால் வங்கியின் பாதுகாப்புப் பெட்டகங்களில் வைக்கப்பட்டிருக்கும் பொருட்கள்.

வங்கியியல் சட்டத்தின் 73(i) பிரிவினால் கோரப்பட்டதன் பிரகாரம், கடந்த பத்து ஆண்டுகளாகச் செயலற்றிருந்த கணக்குகள், சமர்ப்பிக்கப்படாதிருந்த கொடுப்பனவுக் கட்டளைகள் மற்றும் வரைவுகளின் விபரச் சுருக்கத்தை நாம் கீழே பட்டியலிட்டுள்ளோம். அவை கைவிடப்பட்ட சொத்துக்களாக இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பிடப்பட்டுள்ள கைவிடப்பட்ட சொத்துகளின் மேலதிக விபரங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிடப்படவில்லை. மோசடி நபர்கள் அத்தகைய தகவல்களைப் பயன்படுத்திச் சொத்துகளுக்கு உரிமை கோரக்கூடும் என்பதே அதற்குக் காரணமாகும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கைவிடப்பட்ட சொத்து தனக்குரியது என்று கருதும் வாடிக்கையாளர்கள், www.dfcc.lk/contact-us/ என்ற வலைத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களின் ஊடாக அலுவலக நேரங்களில் வங்கியுடன் தொடர்புகொள்ள வேண்டும்.

கிளையின் பெயர்	அறிவிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துகளின் எண்ணிக்கை
அகலவத்தை	5
அளுத்கம	6
அம்பலாங்கொடை	26
அம்பாறை	39
அனுராதபுரம்	94
அத்துருகிரிய	6
அவிசாவளை	30
பதுளை	54
பதுரெலிய	7
பண்டாரநாயக்க மாவத்தை	7
பண்டாரவளை	103
மட்டக்களப்பு	48
பெலியத்த	4
பிபில	1
பொரளை	38
புத்தல	4
மத்திய SLP கொத்தணி	1
சிலாபம்	33
நகர அலுவலகம்	23
தம்புள்ளை	68
தெனியாய	28
திக்வெல்ல	4
கிழக்கு SLP கொத்தணி	1
எம்பிலிப்பிட்டி	13
எப்பாவல	2
காலி	43
கம்பஹா	48
கம்பளை	31
கிரியுல்ல	2
கொடகாவெல	1
ஹக்மன	3

கிளையின் பெயர்	அறிவிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துகளின் எண்ணிக்கை
ஹப்புத்தளை	8
தலைமை அலுவலகம்	13
ஹோமாகம	19
ஹொரணை	90
யாழ்ப்பாணம்	48
கடவத்தை	17
கதுருவெல	86
கடுவெல	1
கலவானை	25
களுத்துறை	38
கண்டி	78
கரந்தெனிய	6
கட்டுகஸ்தோட்டை	14
கேகாலை	24
கெக்கிராவை	15
கிரிபத்கொடை	36
கொட்டாவை	37
கோட்டேகொட	3
குளியாப்பிட்டி	185
குருநாகல்	101
குருவிட்ட	1
மகா ஓய	5
மஹரகம	32
மஹியங்கனை	6
மாலபே	34
மாரவில	2
மாத்தளை	29
மாத்தறை	86
மெதிரிகிரிய	1
மொறட்டுவை	14
மொறவக்க	1

கிளையின் பெயர்	அறிவிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துகளின் எண்ணிக்கை
நாவுல	3
நாவலை	22
நாவலப்பிட்டி	1
நீர்கொழும்பு	27
நிவித்திகல	4
வட மத்திய SLP கொத்தணி	1
நுகேகொடை	32
நுவரெலிய	51
பாணந்துறை	20
புறக்கோட்டை பீப்பிள்ஸ் பார்க்	8
பிலியந்தலை	29
புத்தளம்	4
ராமநாயக்க மாவத்தை	46
ரம்புக்கனை	5
இரத்தினபுரி	47
இரத்தினபுரி சேவை நிலையம்	7
ரத்தோட்டை	3
ருவன்வெல்ல	6
தெற்கு SLP கொத்தணி	1
திருகோணமலை	21
உகனை	1
உரகஸ்மங்ஹந்திய	1
ஊறுபொக்க	4
வவுனியா	40
வியாங்கொடை	4
வரக்காபொல	4
வத்துகெதர	5
வத்தளை	37
வத்தேகம	1
வெலிக்கந்தை	11
வெள்ளவத்தை	18
வென்னப்புவ	6

0112 350000 www.dfcc.lk

ICRA லங்கா ரேட்டிங் [SL] AA- (ஸ்திரம்), ;பிச் ரேட்டிங் A+ (lka) ஸ்திரமான தரப்படுத்தலைப் பெற்ற, CBSL உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

தினகரன்
THINAKARAN
கிகைரன்
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் ஆடி மாதம் 04ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 20

குறள் தரும் சிந்தனை

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது

ஒரு செயலில் ஈடுபட முடிவெடுக்கும் போது அச்செயலால் விளையும் சாதக பாதகங்கள் பற்றிய ஆராய்ச்சியும் முடிவடைந்திருக்க வேண்டும். முடிவெடுத்த பிறகு காலந்தாழ்த்துவது தீதாக முடியும்.

மீண்டும் தலையெடுக்கும் கொவிட் தொற்று அபாயம்!

நாட்டில் கடந்த சில தினங்களாக கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்புப் பிரிவின் தரவுகள் இதனை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் கடந்த 17ஆம் திகதி 25 பேரும், 18ஆம் திகதி 34 பேரும், 19ஆம் திகதி 62 பேரும் என்றபடி இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். என்றாலும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக 522 பேர் தற்போது வைத்தியசாலைகளிலும் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தற்போதைய சூழலில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுகின்றவர்களின் எண்ணிக்கையில் நாளுக்கு நாள் அதிகரிப்பு ஏற்பட்டு வருவது ஆரோக்கியமானதல்ல. இத்தொற்று பரவுதல் தொடர்பில் இந்நாடு பெற்றுள்ள அனுபவங்களின்படி, இத்தொற்றைத் தவிர்த்துக் கொள்வதில் விரைவாகவும் வேகமாகவும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறான காலப்பகுதியில்தான் இந்நாட்டு மக்கள் இருந்து கொண்டிருக்கின்றனர்.

2019 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் சீனாவின் வூஹான் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட இத்தொற்று குறுகிய காலப்பகுதியில் உலகம் முழுவதும் பரவியதோடு, இற்றை வரையும் 553 மில்லியனுக்கும் மேற்பட்டோரைப் பாதித்துள்ளதோடு 6.3 மில்லியன் பேரின் மரணத்திற்கும் காணமாக அமைந்துள்ளது. அந்த வகையில் இலங்கையிலும் 6 இலட்சத்து 64 ஆயிரத்து 510 பேர் பாதிக்கப்பட்டு 16 ஆயிரத்து 528 பேர் உயிரிழந்துள்ளனர்.

2020 ஆம் ஆண்டின் மார்ச் நடுப்பகுதி முதல் இந்நாட்டவர் மத்தியில் தொடராகப் பதிவாகத் தொடங்கிய இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக தற்போது போன்று சிறு எண்ணிக்கையினர்தான் ஆரம்பத்தில் நாளாந்தம் அடையாளம் காணப்பட்டனர். ஆனாலும் அது சொற்ப காலத்தில் ஆயிரம், இரண்டாயிரம் என்றபடி அதிகளவில் பதிவாகியது.

இத்தொற்று பரவுதல் தொடர்பில் ஏற்கனவே பெற்றுள்ள அனுபவங்களின்படி இத்தொற்றைத் தவிர்த்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். இதற்கான தேவையும் அவசியமும் பரவலாக நிலவுகிறது.

அதன் காரணத்தினால் சமூக இடைவெளியைப் பேணிக் கொள்வதும் முகக்கவசம் அணிந்து கொள்வதும் கைகழுவிக் கொள்வதும் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துக் கொள்வதும் இத்தொற்றை தவிர்த்துக் கொள்வதற்கு பெரிதும் உதவக் கூடியதாக இருக்கும்.

இருந்த போதிலும் கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டிருப்பதால் இத்தொற்று ஏற்படாது என்று கருதுபவர்களும் மக்கள் மத்தியில் உள்ளனர். அவ்வாறானவர்கள் முகக்கவசம் அணிவதிலும் சமூக இடைவெளியைப் பேணுவதிலும் கைகழுவுவதிலும் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துக் கொள்வதிலும் அசிரத்தை காட்டக் கூடியவர்களாக இருக்கின்றனர். ஆனால் இத்தொற்றானது தடுப்பூசி பெற்றுக் கொண்டுள்ளவர்களுக்கும் ஏற்படலாம். ஆனால் தடுப்பூசியைப் பெற்றுள்ளவர்களை விடவும் பெற்றிராதவர்கள் மத்தியில் அதன் தாக்கமும் பாதிப்பும் அதிகமாக இருக்க முடியும் என்பதுதான் மருத்துவ நிபுணர்களின் அபிப்பிராயமாகும். அதனால் இத்தொற்று தவிர்ப்பு தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள முடியாது.

இரண்டு கோடி 15 இலட்சத்து 95 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழும் இந்நாட்டில், கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசியின் முதலாவது டோஸை ஒரு கோடி 71 இலட்சத்து 4 ஆயிரத்தும் மேற்பட்டவர்களும் இரண்டாவது டோஸை ஒரு கோடி 45 இலட்சத்து 190 இற்கும் மேற்பட்டவர்களும் பூஸ்டர் டோஸை 80 இலட்சத்துக்கு மேற்பட்டவர்களும் பெற்றுள்ளனர். இத்தரவுகளின்படி இத்தொற்று தவிர்ப்புக்கான தடுப்பூசியின் ஒரு டோஸைக் கூட பெற்றிராவர்களும் சமூகத்தில் இருக்கவே செய்கின்றனர் என்பது தெளிவாகிறது.

அதனால் கொவிட் 19 தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்திக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும். அதனை ஒரு சமூகப் பொறுப்பாகக் கருத வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது. தவறும் பட்சத்தில் கடந்த காலங்களைப் போன்று இத்தொற்று மீண்டும் தீவிரமடையக் கூடிய நிலையை அடைந்து விடும். இவ்வாறான ஆபத்தான நிலையை இந்தியா உட்பட பல நாடுகளிலும் இத்தொற்று அடைந்திருப்பதும் இங்கு சுட்டக்காட்டத்தக்கதாக உள்ளது.

editor.tkn@lakehouse.lk

இலங்கையின் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக இன்று சபையில் வாக்கெடுப்பு

புதிதாகத் தெரிவாகும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியின் பதவிக் காலம் இன்னும் இரண்டரை வருடங்கள்

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் இன்று வாக்கெடுப்பு நடைபெறுகின்றது. பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான டளஸ் அழகப்பெரும, அனுர குமார திசாநாயக்க ஆகியோர் இப்பதவிக்கு போட்டியிடுகின்றனர் . ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலகிக் கொண்ட கோட்டாபய ராஜபக்ஷவின் எஞ்சிய இரண்டரை வருட காலத்துக்கே இன்று தெரிவாகும் புதிய ஜனாதிபதி பதவி வகிப்பார்.

1983ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த ஆர்.பிரேமதாச படுகொலை செய்யப்பட்டதை அடுத்து மே மாதம் 7 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலை விட இம்முறை நடைபெறும் தேர்தல் வித்தியாசமானது.

இம்முறை மும்முனைப் போட்டி நடைபெறுகின்றது. 1983 இல் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் ஒரு பலமான கட்சியாக இருந்தது. எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்றத்தில் குறைந்த எண்ணிக்கையுடன் இருந்ததனால் அபேட்சகர் ஒருவரைக் கூட நிறுத்தவில்லை.

அதனால் பிரதமர் பதவி வகித்த டீ. பீ. விஜேதுங்கவை ஐ.தே.க அபேட்சகராக நிறுத்தியது. அவரது பெயரை சபை முதல்வரும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சருமான விஜயபால மெண்டிஸ் பிரேரித்தார். நீதி உயர் கல்வி அமைச்சரான ஏ .சி.எஸ். ஹமீத் வழிமொழிந்தார்.

இத்தேர்தலை அப்போதைய பாராளுமன்ற செயலாளர் நாயகம் நிஹால் சேனவிரத்ன நடத்தி வைத்தார். இம்முறை தேர்தலை பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மை திசாநாயக்க நடத்தி வைக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களில் ஆகக் கூடுதலான அரசியல் அனுபவம் மிக்கவர் ரணில் விக்கிரமசிங்க ஆவார். ரணில் 1977 முதல் பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாக அங்கம் வகித்து வருகிறார்.

டலஸ் அழகப்பெரும 1994 முதல் மாத்தறை மாவட்ட எம்.பியாக இருந்து வருகிறார். நாட்டின் ஜனாதிபதியாக போட்டியிடும் முதலாவது ஊடகவியலாளர் இவராவார். தென் மாகாண சபைத் தேர்தல் மூலம் அரசியலில் பிரவேசித்த இவர், அதிகப்படியான வாக்குகளில் தெரிவாகி மாகாண அமைச்சராக நியமிக்கப்பட்டார். பொதுஜன பெரமுன அரசில் பல முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார். கோட்டாபய ராஜபக்ஷ அரசில் அவர் கடைசியாக ஊடக அமைச்சர் பதவியை வகித்து இராஜினாமா செய்தார். இவருக்கு வயது 63ஆகும். இவர் லக்மின மற்றும் லக்திவ பத்திரிகைகளின் செய்தி ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க வயதில் குறைந்த அபேட்சகராவர். களனி பல்கலைக்கழக பட்டதாரியான இவர், சந்திரிகா அரசில் காணி விவசாய அமைச்சராகப் பணிபுரிந்தார். ஜாதிக ஜன பலவேகயவின் தலைவரான இவர், அநுராதபுரத்தில் ஒரு விவசாயியின் மகனாவார்.

என். எம்.அமீன்...✍

இந்தியாவின் குடியரசுத் தலைவர் தேர்தல் முடிவு நாளை வெளியாகும்

வெற்றி பெறும் வாய்ப்பில் பா.ஜ.கவின் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் திரௌபதி முர்மு; இந்திய வரலாற்றில் முதன் முதலாக பழங்குடியின பெண் ஒருவர் குடியரசுத் தலைவராகிறார்

இந்திய குடியரசுத் தலைவருக்கான தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள வாக்குச்சாவடியில் பிரதமர் மோடி, அமித்ஷா உள்ளிட்ட பலரும் தங்களது வாக்கை பதிவு செய்துள்ளனர்.

சென்னையில் முதல் வாக்கை முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு செய்தார். காலை 10 மணி தொடங்கி மாலை 5 மணி வரை நாடாளுமன்ற அலுவலகம், மாநில சட்டசபை அலுவலகங்களில் இதற்கான தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் எம்பிக்கள், எம்.எல்.ஏக்கள் வாக்களித்தனர்.

இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக யஷ்வந்த் சின்காவும், பா.ஜ.கவின் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக திரௌபதி முர்முவும் போட்டியிட்டனர். இவர்களில் திரௌபதி முர்முவிற்கு என்.டி.ஏ கூட்டணிக் கட்சிகள் தவிர்த்து வை.எஸ்.ஆர் காங்கிரஸ், பகுஜன் சமாஜ், பிஜு ஜனதா தளம், மதசார்பற்ற ஜனதா தளம், சிரோன்மணி அகாலி தளம், சிவசேனா, ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா ஆகிய கட்சிகள் ஆதரவளித்துள்ளன. இதனால் 60 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்று முர்மு வெற்றிபெற வாய்ப்புகள் உள்ளன. டெல்லி சென்று வாக்களிக்க இயலாத எம்.பிக்கள், மாநிலங்களின் தலைமைச் செயலகத்தில் வாக்களித்தனர். இந்தியா முழுவதும் சுமார் 4,800 எம்.எல்.ஏக்கள், எம்.பிக்கள் இத்தேர்தலில் வாக்களித்தனர்.

தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி, எம்.பி.க்களுக்கு பச்சை நிற வாக்குச்சீட்டும், எம்.எல்.ஏ.க்கள் வாக்களிக்க இளஞ்சிவப்பு நிற வாக்குச்சீட்டும் வழங்கப்படுவது வழமையாகும். ஒவ்வொரு எம்.எல்.ஏ மற்றும் எம்.பி.யின் வாக்கின் மதிப்பைக் கண்டறிய தனித்தனி வண்ணங்கள் தேர்தல் அதிகாரிக்கு உதவுகின்றன.

குடியரசு தலைவர் தேர்தலில் ஒவ்வொரு மாநிலத்தையும் பொறுத்து எம்.எல்.ஏக்களின் வாக்கு மதிப்பு மாறுபடும். மாநிலங்களவை எம்பி, மக்களவை எம்.பிக்களின் வாக்குகளின் மதிப்பு மாறாது. தேர்தலில், எம்.பிக்களின் மொத்த வாக்கு மதிப்பு 5,43,200, எம்.எல்.ஏக்களின் மொத்த வாக்கு மதிப்பு 5,43,231. மொத்தமாக 10,86,431 ஆகும்.

மொத்த வாக்கு மதிப்பில் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெறுபவரே குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவார். தேசிய ஜனநாயக கூட்டணியின் மொத்த வாக்கு மதிப்பு 5,25,893. அதாவது 48.67 சதவீத வாக்குகளை தேசிய ஜனநாயக கூட்டணி தன்வசம் வைத்துள்ளது. மாநிலத்தில் உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப எம்.எல்.ஏக்களின் வாக்கு மதிப்பு மாறுபடும்.

இந்தியாவிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட உத்தர பிரதேச மாநிலத்தில் ஒரு எம்.எல்.ஏயின் வாக்கு மதிப்பு 208. தமிழ்நாட்டில் ஒரு எம்.எல்.ஏயின் வாக்கு மதிப்பு 176. தமிழகத்தில் உள்ள அனைத்து எம்.எல்.ஏக்களின் வாக்கு மதிப்பு 41,184 ஆக உள்ளது. இந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்களித்துள்ள தமிழகத்தில் உள்ள எம்.எல்.ஏக்கள் மற்றும் எம்.பிகளின் மொத்த வாக்கு மதிப்பு 76,378.

இதில் தி.மு.க மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளில் உள்ள மக்கள் பிரதிநிதிகளின் வாக்கு மதிப்பு 62,884 ஆக உள்ளது. 133 சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் 34 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட தி.மு.கவிற்கு மட்டும் 47,208 வாக்குகள் உள்ளன.

காங்கிரஸ் கட்சிக்கு தமிழகத்தில் 18 எம்.எல்.ஏக்கள் மற்றும் 8 எம்.பிக்கள் உள்ளனர்.

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக யஷ்வந்த் சின்ஹா நிறுத்தப்பட்டிருந்தாலும் வெற்றிக்கான வாய்ப்பு இல்லை

எனவே அக்கட்சியின் வாக்கு மதிப்பு 9,468 ஆக உள்ளது. விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு 2,104 வாக்குகளும், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு 3,504 வாக்குகளும், ம.தி.மு.க 700 வாக்குகளும் கொண்டுள்ளன.

அ.தி.முகவிற்கு 66 எம்.எல்.ஏக்களும், 5 எம்.பிக்களும் உள்ளனர். குடியரசுத் தலைவர் தேர்தலில் அ.தி.மு.கவின் மொத்த வாக்கு மதிப்பு 15,116 ஆக உள்ளது. ஆனால் தற்போது அ.தி.மு.கவில் இருந்து ஓ.பி.எஸ், வைத்தியலிங்கம், மனோஜ்பாண்டியன் ஆகிய 3 சட்டமன்ற உறுப்பினர்களும், தேனி நாடாளுமன்ற உறுப்பினரான ரவிந்திரநாத்தும் நீக்கப்பட்டதால் அ.தி.மு.கவின் மொத்த வாக்கு மதிப்பு குறைந்துள்ளது. இருந்த போதும் இந்த 4 பேரும் திரௌபதி முர்முவிற்கு வாக்களிப்பதாக அறிவித்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் தேர்தல் நடைபெற்றதையடுத்து நாளை (ஜூலை 21) குடியரசுத் தலைவர் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தலில் வெற்றிபெறும் புதிய குடியரசு தலைவர் ஜூலை 25 ஆம் திகதி பதவி ஏற்க உள்ளார். தற்போதைய நிலையில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளராக திரௌபதி முர்முவுக்கு வெற்றி வாய்ப்புகள் உள்ளன. எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக யஷ்வந்த் சின்ஹா நிறுத்தப்பட்டிருந்தாலும், காங்கிரஸ் கட்சியின் கூட்டணிக் கட்சிகளும் திரௌபதி முர்முவை ஆதரிக்கின்றன. அதனால் அவருக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகம்.

திரௌபதி முர்முவுக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகம் என்பதால், நாட்டின் ஜனாதிபதியாகும் முதலாவது பழங்குடியின பெண் என்ற பெருமையை அவர் பெறுவார். தற்போதுள்ள குடியரசுத் தலைவரின் பதவிக் காலம் 24 ஜூலை 2022 அன்றுடன் முடிவடைகிறது.

எம்.பியாக சென்னை திரும்பிய இளையராஜாவுக்கு விமான நிலையத்தில் பிரமுகர்கள் பெருவரவேற்பு

அமெரிக்காவிலிருந்து சென்னை திரும்பிய இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு திரையுலகினர் மட்டுமின்றி பா.ஜ.க எம்.எல்.ஏக்கள் உட்பட அக்கட்சியினர் விமான நிலையத்தில் திரண்டு சென்று நேற்று வரவேற்பு அளித்தனர்.

இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் 12 பேர் நியமன உறுப்பினர்களாக உள்ளனர். பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு மாநிலங்களவை நியமன எம்.பி. பதவி வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது மாநிலங்களவை நியமன உறுப்பினர்களாக இசையமைப்பாளர் இளையராஜா, தடகள வீராங்கனை பி.டி.உஷா, வீரேந்திர ஹெக்டே, பிரபல தெலுங்கு திரைப்பட இயக்குநர் ராஜமவுலியின் தந்தை விஜயேந்திர பிரசாத் ஆகியோரை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் எம்.பிக்களாக நியமித்தார்.

இளையராஜா கடந்த சில மாதங்களுக்கு முன்பாக பிரதமர் நரேந்திர மோடியை அண்ணல் அம்பேத்கருடன் ஒப்பிட்டு பேசியதற்காக கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டார். இந்த நிலையில், அதற்காகவே இளையராஜாவுக்கு எம்.பி பதவி வழங்கப்பட்டதாக சமூக வலைதளங்களில் பலர் குற்றம்சாட்டி இருந்தனர்.

அதேசமயம் இளையராஜாவுக்கு வாழ்த்துகளும் குவிந்தன. பிரதமர் நரேந்திர மோடி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி பிரமுகர்கள், அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள், ரசிகர்கள் என பல்வேறு தரப்பினர் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டதற்காக இளையராஜாவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற மழைகால கூட்டத் தொடரில் புதிதாக தெரிவான மாநிலங்களவை உறுப்பினர்கள், நியமன எம்.பிக்கள் பதவியேற்றுக் கொண்டனர். ஆனால், இசையமைப்பாளர் இளையராஜா அமெரிக்காவில் இருந்ததால் நேற்றுமுன்தினம் அவர் பதவியேற்கவில்லை,

அமெரிக்காவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்ட அவர் நேற்று சென்னை விமான நிலையத்தை வந்தடைந்தார். அவருக்கு அங்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. சினிமா துறையிலிருந்து இயக்குநர் பாரதிராஜா நேரில் சென்று இளையராஜாவை வரவேற்றார். அதேபோல் பா.ஜ.க எம்.எல்.ஏக்கள் நயினார் நாகேந்திரன், வானதி சீனிவாசன், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் திரண்டு சென்று வரவேற்றனர்.

இளையராஜாவுக்கு இதுவரை இல்லாத அளவிற்கு பொலிசார் பாதுகாப்பு வழங்கினர்.

மக்களின் உணர்வுக்கு மதிப்பளித்து செயற்பட்ட தலைவர் நல்லூர் சிவா

அஹிம்சை வழியில் போராடியவரும், தமிழர்களின் மாபெரும் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவரும், 'உடுப்பிட்டி சிங்கம்' என புகழப்பட்டவருமான அமரர் மு. சிவசிதம்பரத்தின் (நல்லூர் சிவா) 99 ஆவது பிறந்த தினம் இன்றாகும். அவர் 20.07.1923 இல் பிறந்தார்.

'சிம்மக் குரலோன்' எனவும் 'உடுப்பிட்டி சிங்கம்' எனவும் 'தலைவர் சிவா' எனவும் அழைக்கப்பட்ட சிவா ஐயாவை தமிழ் மக்களால் ஒருபோதும் மறக்க முடியாது. எளிமையைக் கடைப்பிடித்து கொள்கைப்பற்றுடன் இறுதிவரை வாழ்ந்த ஒரு சிறந்த தலைவர் அவர்.

வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்த அவர், பல பெரிய பதவிகளைப் பெற்றிருக்கக் கூடிய நிலையில், அவற்றை எல்லாம் உதறித் தள்ளி மக்கள் சேவகனாக வாழ்ந்தார். தனது உடைமைகளை 1983 கலவரத்தில் முற்றாக இழந்த நிலையில் வாழ்ந்தவர் அவர். அவர் போன்ற தலைவரைக் காண்பது எதிர்காலத்தில் முடியாத ஒன்றாகும்.

அமரரின் 99 ஆவது பிறந்ததினம் இன்று

1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பருத்தித்துறையில் போட்டியிட்டு தோல்வியடைந்த மு.சிவசிதம்பரம், 'சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம்' மற்றும் அரசுக்கு எதிரான வேலைநிறுத்த எதிர்ப்புப் போராட்டங்களில் கட்சி வேறுபாடின்றி ஆதரவு அளித்து வந்தார்.

1960 மார்ச் தேர்தலில் உடுப்பிட்டி தொகுதியில் 7365 வாக்குகளைப் பெற்றுத் தெரிவானார். பின்னர் 1960 ஜூலையில் அதே உடுப்பிட்டி தொகுதியில் 9080 வாக்குகளைப் பெற்று மீண்டும் தெரிவானார். 1965இல் 12,009 வாக்குகளைப் பெற்றுத் தெரிவாகிய சிவசிதம்பரம், 1970இல் 11,662 வாக்குகளைப் பெற்று தமிழரசுக் கட்சியில் போட்டியிட்ட ஜெயக்கொடியினால் தோற்கடிக்கப்பட்டார்.

1972 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பினை எதிர்த்து தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணியை உருவாக்கிய வேளையில், அதன் இணைச் செயலாளர்களில் ஒருவராக இருந்தார். 1977 இல் நல்லூரில் 29858 வாக்குகளைப் பெற்று (28137 வாக்கு வித்தியாசத்தில் இலங்கையில் தனிஉறுப்பினர் தொகுதியில் அதிகூடியது) வெற்றி பெற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரானார்.

1989 இல் யாழ் மாவட்டத்தில் 8359 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார். கொழும்பில் 1989 July 13 இல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகாயமுற்று மயிரிழையில் தப்பி சிகிச்சை பெற்ற வேளையிலும் கூட தமக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்காதவர்.

1994 இல் வன்னியில் போட்டியிட்டு தோல்வியடைந்த பின்னரும், கட்சிப் பணிகளில் தீவிரமாகப் பங்கு கொண்டவர். 1998 இல் சுகவீனமுற்ற போது இந்தியாவுக்குச் சென்று தனது குடும்பத்தவர்களுடன் இருந்து கட்சியின் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டார்.

05.12.2001 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 4 கட்சிகளின் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். வயது முதிர்ச்சி காரணமாக சில நாட்கள் சுகவீனமுற்றிருந்த அவர் 05.06.2002 இல் கொழும்பு வைத்தியசாலையில் காலமானார்.

அவரது இறுதிக் கிரியைகள் அவரது விருப்பத்தின்படி அவரது சொந்த ஊரான கரவெட்டியில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. அன்னாரின் 99 ஆவது பிறந்த தினம் இன்றாகும். மக்களை உணர்வுகளை மதித்து செயற்பட்ட தலைவரின் நினைவுகளை ஒருபோதும் மறக்க முடியாது.

1967 முதல் 1970 வரை பிரதி சபாநாயகராக பாராளுமன்றில் கடமையாற்றிய பெருமைக்கும் உரியவர் அவர்.

தங்க முகுந்தன்...✍
(மூளாய், சுளிபுரம்)

திருமலை மாவட்ட மக்களால் நேசிக்கப்படும் மர்ஹூம் மஹ்ரூப்

திருமலை மாவட்ட அரசியல் பிரமுகர்களில் மக்களால் என்றும் மறக்க முடியாதவர் முகம்மது எகுத்தார் ஹாஜியார் மஹ்ரூப் (5 ஜனவரி 1939_ 20 ஜூலை 1997) ஆவார்.

அன்னாரின் தந்தை கிண்ணியா கிராமசபைத் தலைவராக இருந்தவர். சகோதரர் எம். ஈ. எச். முகம்மது அலி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். எம்.ஈ.எச். மஹ்ரூப் மாத்தளை சாகிரா கல்லூரி, கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, கண்டி புனித அந்தோனியார் கல்லூரி, கொழும்பு பெம்புரோக் அகடமி ஆகியவற்றில் கல்வி பயின்றார்.

மர்ஹூம் மஹ்ரூப் 1965 இல் தந்தை இறந்ததை அடுத்து அரசியலில் இறங்கினார். கிண்ணியா நகர சபையில் தலைவராக 1966 முதல் 1971 வரை இருந்தார். அவர் 1977 பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக மூதூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்றார்.

1978 இல் மன்னார் மாவட்ட அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1989 தேர்தலில் ஐ.தே.க வேட்பாளராக திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு மீண்டும் பாராளுமன்றம் சென்றார். 1990 இல் துறைமுகங்கள், மற்றும் கப்பல் போக்குவரத்து இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1994 தேர்தலில் மீண்டும் வேட்பாளராக நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றார்.

மஹ்ரூப் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களுடன் சிறந்த புரிந்துணர்வைக் கொண்டிருந்தார். 1997 ஜூலை 20 ஆம் திகதி காலையில் அவர் பயணம் செய்த வாகனம் இறக்கண்டி செல்லும் வழியில் குச்சவெளி வீதியில் திருகோணமலைக்கும் நிலாவெளிக்கும் இடையில் 6 ஆம் மைல் கட்டையடியில் வைத்து கண்ணிவெடி ஒன்றில் சிக்கியது. அத்தாக்குதலில் மஹ்ரூப் கொல்லப்பட்டார். அவருடன் மேலும் ஐவரும் (ஓட்டுனர், பாதுகாப்பு அதிகாரி, நண்பர், பாடசாலை அதிபர் ஒருவர், சாரதியின் 5 வயது மகன்) கொல்லப்பட்டனர். புலிகளே இத்தாக்குதலை மேற்கொண்டதாக பரவலாகக் குற்றம் சாட்டப்பட்டது.

25ஆம் வருட நினைவு தினம் இன்று

இலங்கை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய கண்ணியமான அரசியல்வாதிகளில் அவர் முக்கியமானவர். தனது பதவிக் காலத்தில் திருமலை மாவட்ட மக்களது கல்வி வளர்ச்சிக்காக பல புதிய புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியவர் இவர்.

அன்பு இல்லாத வாழ்க்கை என்பது வெறும் சூன்யம்

உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் ஆதாரமானது அன்பு எனும் மூன்றெழுத்து வார்த்தை. அன்பிற்கு மறுபெயர் அம்மா என்பார்கள். தன்னலமற்ற அன்பிற்கு உதாரணம் தாய்மை என்றால் மிகையாகாது. அன்பு என்பது சகல ஜீவராசிகளுக்குள்ளும் இயற்கையாக காணப்படுகின்ற ஒரு உணர்வு. இதனை உணர்வு பூர்வமாகவும் சொற்களாலும் வெளிக்காட்டக் கூடிய இயல்பு மனித இனத்திற்கு மாத்திரமே கிடைத்த ஒரு அருங்கொடையாகும்.

அன்பு இல்லாத வாழ்க்கை என்பு இல்லாத உடல் போன்றது. என்பு எனும் ஆதாரமின்றி எப்படி உடல் இருக்கமுடியாதோ அவ்வாறே அன்பு இல்லாத வாழ்வும் பயனற்றது. ஏன்? தாய், தந்தை, பிள்ளைகள் உறவாகட்டும், கணவன், மனைவி உறவாகட்டும், சகோதர உறவு, நட்பு, காதல் அனைத்தும் நிலைத்து நிற்க அடிப்படைக் காரணம் அன்பு மட்டுமே.

பிறக்கும் அனைத்து உயிர்களுக்கும் இறப்பு என்பது மாற்றமுடியாத இயற்கையான ஒரு விடயம். ஏன் பிறப்பு உண்டாகின்றது? நாம் ஏன் பிறக்கின்றோம்? என பல கேள்விகளை தொடர்ச்சியாக கேட்கலாம். ஆனால் மாணிக்கவாசகர் கூறியபடி ஆத்மாவானது தனது பிறவிப்பயனை அனுபவித்து தனது கர்மவினைகளை பூர்த்தி செய்வதற்காக அடுத்தடுத்து பல்வேறு பிறவிகளை எடுத்து இறுதியில் பரமாத்மாவுடன் இரண்டறக் கலந்து முக்தி அல்லது வீடுபேறு அடைய வேண்டும். இதுவே நிஜம்.

எனவே மனிதப்பிறவி என்பது இயற்கை எமக்கு அருளிய ஒரு வரப்பிரசாதம். ஏனைய உயிர்களுடன் ஒப்பிடுகையில் மனிதப்பிறவிக்கு மாத்திரமே ஆறறிவு வழங்கப்பட்டுள்ளது. எனவே சிந்தித்து செயலாற்றி மனம், வாக்கு, காயம் மூன்றிலும் சீரான தன்மையுடன் வாழவேண்டியதாயின் அன்பு மிக மிக அவசியமானது.

அன்பு இல்லாத காரணத்தினால் உலகில் பஞ்சமாபாதகங்கள் இலகுவில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. நாளாந்த செய்திகளில் கூட எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நடைபெறும் மனிதாபிமானம் அற்ற செயல்கள் பற்றி கண்கூடாக பார்க்கின்றோம். எரிபொருளுக்காக ஒருவரை ஒருவர் தாக்குவதும், காதால் கேட்கவே முடியாத வார்த்தைப் பிரயோகங்கள், முதியவர்கள், கர்பிணித்தாய்மார்கள், விசேட தேவையுடையோர் போன்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்க முடியாமை, பொதுச் சொத்துக்களை நாசப்படுத்துதல் போன்ற நிலைகள் சாதாரணமாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

தற்போது, ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல் தனியொருவருக்கானது இல்லை. இன மத பேதமின்றி அனைத்து மக்களுக்குமே ஏற்பட்டுள்ள பாரிய பிரச்சினை இது. மற்றவர்களைக் குறை கூறுவதற்கு முன்னர், நாம் அனைவரும் சரியாக நடக்கின்றோமா என சுயபரிசோதனை செய்து பார்க்க வேண்டியது மிக அவசியம். நமது சமூகத்தையும், தாய்நாட்டையும் பேணிப் பாதுகாப்பதில் நாட்டு குடிமக்கள் அனைவருக்கும் சம உரிமை, கடமை உண்டு என்பதை நாம் என்றும் மறக்கக் கூடாது. எமக்கு நாட்டுப்பற்று இருக்க வேண்டும்.

அன்பின் முக்கியத்துவம் பற்றி எமது முன்னோர்கள், வாழ்வையே சாதனையாக மாற்றிய பெரியோர்கள் மற்றும் அறிஞர்கள் என்ன கூறியிருக்கின்றார்கள் என்று ஆராய்ந்து பார்த்தோமானால், மனிதனை நிறைமனிதன் ஆக்குவது பகவத்கீதையின் கோட்பாடாகும். பேராற்றல் படைத்திருப்பது முதல் கோட்பாடு. அடுத்த கோட்பாடாவது அன்பு. உயிர்கள் அனைத்துக்கும் அது பொதுவானது. அன்பைத் தூய அன்பாக மாற்றியமைப்பது பக்தியோகத்தின் நோக்கமாகும்.

புத்தர் பெருமான் கூட, 'உன் அன்பு எந்த இடத்தில் நிராகரிக்கப்பட்டாலும் இழப்பு உனக்கு இல்லை நிராகரித்தவருக்கே என்பதை புரிந்து கொள்' என்று கூறியிருக்கின்றார். அதே போல இயேசுநாதர் கூறியிருப்பதாவது 'அன்பு கொள்ளாதவன் கடவுளை அறியாதவன் ஏனெனில் அன்பே கடவுள்'. ஆதலால் தான் 'ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு' என்று போதித்தும் இருக்கின்றார். அனைத்து உயிர்களிடத்தும் இஸ்லாம் அன்பு காட்டச் சொல்கிறது. 'பூமியில் உள்ளவை மீது அன்பு காட்டுங்கள். வானத்தில் உள்ளவன் உங்கள் மீது அன்பு காட்டுவான்' என்பது நபிமொழி. அதேபோல, 'மனிதர்களுக்கு அன்பு காட்டாதவருக்கு அல்லாஹ் அன்பு காட்டமாட்டான்' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அனைத்து மதங்களும், ஞானிகளும் போதித்துள்ள உண்மைத் தத்துவம்

சீரடி சாய்பாபா கூறுகின்றார், 'அன்பே மிக உன்னதமானது – அன்பு அலைகள் எங்கும் மேலெழும்பினால் உலகம் சுபிட்சமாகி விடும்'. மேலும் 'நீ பிறரிடம் அன்பும் மரியாதையும் எதிர்பார்ப்பாயானால் முதலில் நீ பிறருக்கு அன்பும் மரியாதையும் அளிக்க வேண்டும்'. அவ்வாறே பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா கூறியிருப்பதாவது, 'அனைவரையும் நேசி, அனைவருக்கும் சேவை செய், எப்போதும் உதவி செய், ஒருபோதும் காயப்படுத்தாதே'.

சுவாமி விவேகானந்தர் கூறியிருப்பதாவது, 'அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்து தரும்'.

திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் கூட அன்புடைமை என்ற அதிகாரத்தில் அன்பின் முக்கியத்துவம் பற்றி 10 குறள்களை கூறியுள்ளதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவற்றில் முக்கியமாக, உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியாது. தாம் அன்பு செலுத்துபவர்களிடம் துன்பங்காணுமிடத்து, அவ்வன்பானது கண்ணீர்த்துளி வாயிலாக வெளிப்பட்டுவிடும் என்பதனை

'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்'.

எனும் திருக்குறள் மூலமாகவும், அன்பு இல்லாதவர் எல்லாப்பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார். ஆனால், அன்பு உடையவர்கள் தமது உடமைகளையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர் என்பதனை

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'.

எனும் திருக்குறள் மூலமாகவும், உலகத்தில் இன்பம் உற்று வாழ்கின்றவர் அடையும் சிறப்பு, அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்கையின் பயன் என்று கூறுவர் என்பதனை

'அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு'.

எனும் குறள் மூலமாகவும், முன்னர் கூறிய வாறு, அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும்: அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பே ஆகும் என்பதனை

'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு'.

எனும் குறள் மூலமாகவும் கூறியிருப்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

சேவைக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த அன்னை தெரசா கூறியவற்றை ஆழ்ந்து நோக்கினால், 'மனம் விட்டு பேசுங்கள் அன்பு பெருகும்', 'குற்றம் காணத் தொடங்கினால் அன்பு செய்ய நேரம் இருக்காது', 'வாழ்வின் உண்மையான பொருள் அன்பு செலுத்துவதிலும், அன்பு செலுத்தப்படுவதிலுமே பொதிந்துள்ளது', 'வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாக இருங்கள்', 'அன்பு என்பது சொற்களில் வாழ்வதில்லை. அன்பைச் சொற்களால் விளக்கவும் முடியாது. செயல்களால் விளக்கம் பெறுகிறது அன்பு', 'அன்பு தான் உன் பலவீனம் என்றால் இந்த உலகின் மிகச் சிறந்த பலசாலி நீ தான்'. எவ்வளவு அற்புதமான வார்த்தைகள்? இதனை அனைவரும் அனுபவத்தின் மூலம் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும். ஏனெனில் அன்னை தனது வாழ்கையில் தன்னலமற்ற சேவைக்காக எத்தனையோ துன்பங்கள், அவமானங்கள் ஏற்பட்ட போதும் அவர் தனது கடமையிலிருந்து சிறிதும் தவறவில்லை. அவரது வாழ்க்கை அனைவருக்கும் ஒரு முன்னுதாரணமான எடுத்துக்காட்டு.

வாழ்க்கை என்பது ஒருமுறைதான். அந்த வாழ்க்கையை அன்பால் நிரப்பி அழகான வாழ்க்கையாக மாற்றுங்கள்.

வைத்திய கலாநிதி. (செல்வி)
வினோதா சண்முகராஜா...✍
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவ அலகு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

கலாநிதி
திருமதி **கௌரி ராஜ்குமார்...✍**
சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை, விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

Dialog நிறுவனம் OnMobile உடன் இணைந்து அறிமுகப்படுத்தும் ONMO Cloud Gaming Platform

டயலொக் மொபைல் வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான, அதிவேகமான கேமிங் அனுபவத்தை வழங்குவதற்காக ONMO (www.onmo.dgl.lk) ஐ அறிமுகப்படுத்த இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி மொபைல் பொழுதுபோக்குகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான OnMobile உடன் இணைந்து கொண்டுள்ளது.

cloud streaming, social Esports மற்றும் Artificial Intelligence (AI) ஆகியவற்றை கொண்ட மொபைல் கேமிங் தளமான ONMO ஆனது, டயலொக் மொபைல் வாடிக்கையாளர்களுக்கு action, arcade, racing, adventure, puzzles மற்றும் பல வகைகளை உள்ளடக்கிய 60 இற்கும் மேற்பட்ட அற்புதமான மொபைல் கேம்களுக்கான அணுகலை ஒவ்வொரு வாரமும் வழங்குகிறது.

வாடிக்கையாளர்கள் ONMO மற்றும் அதன் பரந்த அளவிலான கேம்கள் அனைத்தையும் மாதத்திற்கு ரூ. 399 +வரிகளுக்கு பெற்றுக் கொள்ள முடியும். ONMO இன் Vision AI engine, டவுன்லோட் செய்ய வேண்டிய அவசியமின்றி ஒரு சமூக தளத்தில் அனைவரும் அணுகும் வண்ணம் Esports ஐ வழங்குகிறது. மேலும் பல அற்புதமான அம்சங்களுடன் short, curated game moments மற்றும் virtual rewards உடன், சமூக விளையாட்டு அம்சத்தையும் இந்தத் தளம் வழங்குகிறது.

டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி இன் குழும கண்டுபிடிப்பு மற்றும் வடிவமைப்பு அதிகாரி அந்தோனி ரோட்ரிகோ, இந்த சமீபத்திய மொபைல் கேமிங் அனுபவம் குறித்து பேசிய போது"எங்கள் பங்காளரான OnMobile உடன் இணைந்து இலங்கையில் வர்த்தக கிளவுட் கேமிங் தளத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தியதில் டயலொக் பெருமை கொள்கின்றது. இந்த கிளவுட் கேமிங் தளமானது ஸ்மார்ட்போன்களுக்காகவும், டயலொக்கின் 4G மொபைல் மற்றும் ஹோம் புரோட்பாண்ட் வலையமைப்புகளில் தடையின்றி இயங்குவதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது. எதிர்காலத்தில் அனைத்து இலங்கையர்களுக்கும் கிளவுட் கேமிங்கிற்கு 5G தொழில்நுட்ப திறனை வழங்க கூடியதாக இருக்கும் என்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" என்றார்.

ONMO இன் தலைமை நிர்வாக அதிகாரி கிரிஷ் சேஷாத்ரி கருத்து தெரிவிக்கையில், "இலங்கையில் முதல் கிளவுட் கேமிங் தளத்தை அறிமுகப்படுத்த டயலொக் உடன் இணைந்ததையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ONMO – குறுகிய, நன்கு வடிவமைக்கப்பட்ட கேமிங் தருணங்கள் மற்றும் அனைவரும் விளையாடக் கூடிய virtual rewards போன்ற அம்சங்கள் மூலம் மிகச் சிறந்த பொழுதுபோக்குடன் கேமிங் அனுபவத்தை வாடிக்கையாளர்களுக்கு டயலொக் வழங்கும்" என்றார்.

போட்டியினறி ஜனாதிபதி,...

03ஆம் பக்க தொடர்...

வேண்டும். எவருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் இதுவரையில் நான் தீர்மானிக்கவில்லை. தீர்மானம் ஒன்றுக்கு வருவதற்கு அதிக காலம் செல்லாது.

நால்வர் போட்டியிடப்போவதாக முன்பு தெரிவிக்கப்பட்டது. அது மூன்றாக தற்போது குறைவடைந்துள்ளது. இன்னும் ஒன்று அதிலிருந்து குறைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வாறு குறைவதற்கான பேச்சுக்களும் அடிபடுகின்றன.

மூவரே போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளனர். அதுபோல இன்று இடைக்கால ஜனாதிபதி முன்மொழியப்பட்டுள்ள பெயர்களிலிருந்து ஒருவர் விலகுவதற்கான வாய்ப்பும் காணப்படுகிறது.

போட்டியில்லாது ஜனாதிபதி, பிரதமரை தெரிவு செய்வதே சிறந்தது. அவ்வாறு செயற்பட்டால் உலகுக்கும், நாட்டுக்கும் முன்னுதாரணமாக அது அமையும். ஏ்வாறெனினும்

ஜனாதிபதி தெரிவுக்கு மூவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதால் அரசியல் கட்சிகள் பலவற்றில் பிளவுகள் ஏற்பட்டுள்ளமை இதில் துரதிஸ்டமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

திடீரென அதிகரித்துள்ள...

03ஆம் பக்க தொடர்...

10 நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், தற்போது நாளாந்தம் 25 கொரோனா நோயாளர்கள் பதிவாகுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிக்குமாறு பொதுமக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படக்கூடுமென சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். குறிப்பாக உலகம் முழுவதும் பரவி வரும் கொரோனா வைரஸின் புதிய மாறுபாடு இலங்கைக்குள் நுழையும் அபாயம் இருப்பதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனாவின் புதிய மாறுபாடு நாட்டுக்குள் நுழைந்ததா? என்பதை கண்டறிய வேண்டுமென அதன் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

காகித பயன்பாட்டுக்கு...

03ஆம் பக்க தொடர்...

சார்ந்த பொருட்களை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்படும் 22 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை தமது திணைக்களத்தால் சேமிக்க முடியுமென சுங்க பணிப்பாளர் நாயகம் விஜித ரவிப்பிரிய தெரிவித்தார்.

புதிய முறைமையின் பிரகாரம், அலுவலகப் பணிகள் தானியங்கி கணனி கட்டமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன், அந்த நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கை சுங்கத்தின் தகவல் தொழில்நுட்ப அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுவது விசேட அம்சமாகும்.

நாட்டை மீட்பதற்கான உச்ச...

03ஆம் பக்க தொடர்...

அரசாங்கமொன்றை அமைப்பதற்காக உடன்பாடொன்றுக்கு வரவேண்டுமென ஆரம்பம் முதல் கோரி வந்தேன். சஜித் பிரேமதாஸ தலைமையிலான அரசாங்கமொன்றை உருவாக்கவும் குறுகிய காலத்தினுள் 19 ஆவது திருத்தத்தை ஒத்த யாப்பு திருத்தத்தை முன்வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டை மீட்பதற்கு எம்மால் முடிந்த உச்ச அர்ப்பணிப்பை மேற்கொள்வோம்.

தனி நபர் குறித்து சிந்திக்காமல் உடன்பாடொன்றை எட்டி ராஜபக்ஷ யுகமொன்று மீண்டும் உருவாகாதாவாறு செயற்பட இனக்கம் காணப்பட்டுள்ளது. இதில் எதிர்க்கட்சித் தலைவரின் அர்ப்பணிப்பை வரவேற்க வேண்டும். சஜித் பிரேமதாஸ பதவி பெற பின்வாங்கியதாக யாரும் கருதக் கூடாது. இவ்வாறான உடன்பாடொன்றை எட்ட நான் ஆரம்பம் முதல் போராடினேன். குரல் கொடுத்தேன். அது வெற்றியளித்துள்ளது. கட்டமைப்பு மாற்றம் தொடர்பான போராட்டக்காரர்களின் கோரிக்கைக்கு அமைய நாமும் மாற்றம் அமைப்பதற்கான பொறிமுறை ஒன்று அமைக்கப்படும். போராட்டக்காரர்களின் கருத்துக்களை வெளிப்படையாக முன்வைக்கவும் அவகாசம் வழங்கப்படும் என்றார்.

கூட்டமைப்பின் சில...

03ஆம் பக்க தொடர்...

வெளியாகியுள்ளன. எனினும் இறுதியில் பொது இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லையென கூறப்படுகின்றது.

பெரும்பாலும் வாக்கெடுப்பின் போது கூட்டமைப்பு நடுநிலைமை வகிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனாலும் இறுதி நேரத்திலேயே தீர்மானம் மேற்கொள்ளப்படுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தலின் போது இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படுமாக இருந்தால், கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களிக்க கூடுமெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தடுப்பூசியை பெற்றதால்...

03ஆம் பக்க தொடர்...

செய்தி அறிந்ததிலிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் என்னைத் தொடர்பு கொண்டும், கடிதம் எழுதியும் நலம் பெற வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள். நலமடைந்துவிட்டேன் என்ற நல்ல செய்தியுடன் அத்தனை நல்லுள்ளங்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவமனையிலிருந்து வெளியேறினாலும், ஒருவார காலத்துக்கு வீட்டிலிருந்து ஓய்வெடுக்க வேண்டுமென மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

வீட்டில் இருக்க சம்மதித்தாலும், ஓய்வில் இருந்திட மனம் ஒப்பவில்லை. உங்களில் ஒருவனான என்னை நம்பி, தமிழ்நாட்டு மக்கள் அளித்துள்ள பெரும் பொறுப்பினை உணர்ந்து, முதலமைச்சர் என்ற முறையில் ஆற்ற வேண்டிய பணிகளை, கவனிக்க வேண்டிய கோப்புகளை, எடுக்க வேண்டிய முடிவுகளை, செயல்படுத்த வேண்டிய திட்டங்களை வீட்டில் இருந்தாலும் கவனித்தபடிதான் இருப்பேன்.

குடியரசுத் தலைவர் தேர்தல் நடைபெறுவதால், அதற்கான ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு நேரில் சென்று வாக்களித்துவிட்டுத் திரும்பியுள்ளேன் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் அலுவலகத்தை...

மாளிகை, அலரி மாளிகை மற்றும் பிரதமரின் அலுவலகம் என்பன சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன் அங்கிருந்த பெறுமதியான பொருட்கள் மற்றும் ஆவணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொளிகள், சிசிடிவி காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு இவர்களுக்கு எதிரான ஆதாரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும், விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்தின் மீது தாக்குதலை மேற்கொண்ட நபர் ஒருவர் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

எனவே ஏனையவர்களும் நாட்டை விட்டு வெளியேறாமல் இருப்பதற்காக இந் நபர்களுக்கு எதிராக நீதிமன்றத்தினூடாகப் பயண தடையை பெற்றுக்கொள்ள பொலிஸார் தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று நள்ளிரவு முதல் குறைந்த...

ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதன்படி 40 ரூபாவாக இருந்த ஆரம்பக்கட்டணம் 38 ரூபாவாகக் குறைவடைவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இத்திருத்தம் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வருமெனவும் மாறாக உயர்வான கட்டணம் அறவிடப்படும் பட்சத்தில் அதுகுறித்து பயணிகள் 1955 என்ற இலக்கத்தினூடாக முறைப்பாடு அளிக்கமுடியுமெனவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தேசிய எரிபொருள் அனுமதி...

எந்த நேரத்திலும் நீங்கள் QR குறியீட்டைப் பெற விரும்பினால், நீங்கள் http://fuelpass.gov.lk ஐப் பார்வையிடலாம்.

மற்றும் அதைப் பெற கைத்தொலைபேசி எண்ணைப் பயன்படுத்தி உள்நுழையலாம்.

அவ்வாறு இல்லையெனில், Fuel <இடைவெளி>QR<இடைவெளி> <வாகன எண்> என டைப் செய்து 076 6220 000 என்ற எண்ணுக்கு SMS அனுப்புவதன் மூலமும் அதைப் பெற முடியும்.

மற்றும் புதிய பதிவுக்காக www.fuelpass.gov.lk ஐப் பார்வையிடுவதன் மூலம் பதிவு செய்யலாம்.

ஜனாதிபதி பதவிக்கு...

டலஸ் அழகப்பெரும மற்றும் ஜே.வி.பி தலைவர்அனுரகுமார திசாநாயக்க எம்.பி ஆகியோரே போட்டியிடுகின்றனர்.

பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு கூடியது. சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் ஆகியோரின் அறிவிப்புகளை தொடர்ந்து வெற்றிடமான ஜனாதிபதி பதிவிக்கான வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெருமவின் பெயரை எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச முன்மொழிந்ததுடன், பொதுஜன பெரமுன தலைவர் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அதனை வழிமொழிந்தார். அடுத்து பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன முன்மொழிந்ததுடன், அமைச்சர் மனுஷ நாணயக்கார அதனை வழிமொழிந்தார். அதேபோன்று ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திசாநாயக்கவின் பெயரை அவரது கட்சியின் பிரசாரச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அதனை வழிமொழிந்தார்.

முன்னதாக ஜனாதிபதி பதவிக்கு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ,டளஸ் அழகப்பெரும எம்.பி மற்றும் ஜே.வி.பி தலைவர் அனுர குமார திசாநாயக்க ஆகியோர் போட்டியிடுவதாக அறிவித்திருந்தனர். ஆனால் இறுதி நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ போட்டியிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

இந்த நிலையில் வேட்பாளர்கள் மூவரினதும் வேட்புமனுக்கள் 1981 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஜனாதிபதித் தோ்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்துக்கமைய ஜனாதிபதி பதவி தெரிவுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவத்தாட்சி அதிகாரியான பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க அறிவித்தார்.

அதற்கமைய இன்று (20) காலை 10.00 மணிக்கு ஜனாதிபதி தேரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பு நடைபெற உள்ளதோடு வேட்பாளர்கள் மூவரில் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளால் தேர்தெடுக்கப்படவுள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி தனது பதவியை இராஜினாமா செய்ததோடு அதற்கான கடிதத்தை சபாநாயகருக்கு அனுப்பி வைத்திருந்தார். அதற்கமைய கடந்த 16 ஆம் திகதி பாராளுமன்றம் கூடியதோடு ஜனாதிபதி பதவியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் பாராளுமன்றத்துக்கு அறிவித்தார். அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும் அவர் அறிவித்தார். அதற்கமைய நேற்று (19) ஜனாதிபதிப் பதவிக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இதற்கமைய 10 நிமிடங்களே பாராளுமன்றம் கூடியதோடு வேட்புமனுக்கள் ஏற்கப்பட்ட பின்னர் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கை வரலாற்றில் இரண்டாவது தடவையாகவே பாராளுமன்றத்தினூடாக ஜனாதிபதி ஒருவர் தெரிவாவதோடு 1993 இல் டி.பி.விஜேதுங்க போட்டியின்றி தெரிவானது குறிப்பிடத்தக்கது.(பா)

சம அளவில் வாக்குகள் பெறின்...

வாக்குகளை பெற்றால் திருவுளச்சீட்டு போடப்பட்டு ஜனாதிபதி தெரிவாக இருப்பது விசேட அம்சமாகும்.

ஜனாதிபதி பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டுள்ள நிலையில் இன்று காலை ரகசிய வாக்களிப்பு நடைபெறுவதோடு தெரிவத்தாட்சி அலுவலராக பாராளுமன்ற செயலாளர் நாயகம் செயற்படுவார். வெற்று வாக்குச்சீட்டுப் பெட்டியை அல்லது வெற்று வாக்குச்சீட்டுப் பெட்டிகளை உறுப்பினர்களுக்குக் காண்பித்துப் பின்னர் பெட்டி முத்திரையிடப்படும். இன்றைய வாக்கெப்பில் சபாநாயகருக்கு வாக்களிக்கும் உரிமை காணப்படுவது விசேட அம்சமாகும்.

தெரிவத்தாட்சி அலுவலராக செயற்படும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் வாக்குச்சீட்டைப் பெறுவதற்காக சபாநாயகர் உட்பட ஒவ்வொரு உறுப்பினரினதும் பெயரை அழைப்பார். வேட்பாளர்களின் பெயர்களுக்கு முன்பாக 1,2,3, எனும் வகையில் விருப்பு வாக்குகளை பதிவுசெய்ய முடியும்.

வாக்களிப்பு நிறைவடைந்ததும் ஒவ்வொரு வேட்பாளர்களுக்கும் அளிக்கப்பட்ட விருப்பு வாக்குகள் எண்ணப்படும். வாக்கு எண்ணப்படும் இடத்துக்கு யாராவது வேட்பாளர் செல்வதற்கு விரும்பினால் இதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். இல்லாவிட்டால் அவருடைய பிரதிநிதியாக பிறிதொரு உறுப்பினரை இதற்காக நியமிப்பதற்கான சந்தர்ப்பமும் வேட்பாளருக்கு உள்ளது.

அளிக்கப்பட்ட வாக்குகளில் செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையில் அரைவாசிக்கு மேலான வாக்குகள் யாராவது ஒரு வேட்பாளருக்குக் கிடைக்குமாயின் குறித்த வேட்பாளர் ஜனாதிபதிப் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பதை பாராளுமன்ற செயலாளர் நாயகம் உடனடியாக அறிவிப்பார். அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கு மேலான வாக்குகள் எந்தவொரு வேட்பாளருக்கும் வழங்கப்படாத சந்தர்ப்பத்தில் குறைவான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் போட்டியிலிருந்து நீக்கப்படுவார். அவ்வாறு நீக்கப்படும் உறுப்பினருக்கு முதலாவது விருப்பைத் தெரிவித்த உறுப்பினர்களின் இரண்டாவது விருப்பத் தெரிவு உரிய வேட்பாளர்களின் வாக்குகளுடன் இணைக்கப்படும்.

அந்த நிலையிலும் எந்தவொரு வேட்பாளருக்கும் செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கும் அதிகமான வாக்குகள் கிடைக்கவில்லையாயின் ஒவ்வொரு கணக்கெடுப்பின் போதும் குறைந்த விருப்பு வாக்குகளைப் பெற்ற உறுப்பினர்கள் போட்டியிலிருந்து நீக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்ட விருப்பு வாக்குகள் இரண்டாவது, மூன்றாவது விருப்பு வாக்குகளைப் பெற்ற வேட்பாளர்களுடன் சேர்க்கப்படும்.

இவ்வாறு செய்தும் எந்தவொரு வேட்பாளரும் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் அரைவாசிக்கும் அதிகமான எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றுக்கொள்ளவில்லையாயின் மேலே குறிப்பிடப்பட்டது போன்று வாக்கு எண்ணும்போது அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவுசெய்யப்படுவார். இதனை தெரிவத்தாட்சி அலுவலரினால் சபைக்கு அறிவிக்கப்படும்.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு இடையே வாக்குகள் சமமாக இருந்தால், தெரிவத்தாட்சி அலுவலரின் தற்றுணிபின் பேரில் திருவுளச்சீட்டு போடப்படும்.

அத்துடன், ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள் வேட்பாளரின் பெயரை செயலாளர் நாயகம் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவார். (பா)

படகு கவிழ்ந்ததில்...

திரும்பிக்கொண்டிருந்தனர். 100 க்கும் மேற்பட்டோர் பயணித்த அந்த படகு இந்தோஸ் ஆற்றில் பஞ்சாப் மற்றும் சிந்து மாகாண எல்லையில் பயணித்துக்கொண்டிருந்தது. அப்போது, படகு எதிர்பாராத விதமாக ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தால் படகில் பயணித்த 100 பேரும் ஆற்று நீரில் அடித்துச்செல்லப்பட்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், மீட்புக்குழுவினர் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்த படகு விபத்தில் 19 பெண்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உடல்கள் ஆற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. மேலும், பலர் ஆற்றில் அடித்துச்செல்லப்பட்டுள்ளனர். அவர்களை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதனால், பலி எண்ணிக்கை உயருமென்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. அதிகளவிலான மக்களை படகில் ஏற்றியது, நீரின் ஓட்டம் அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாமென முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

வாழ்த்துக்களை பரிமாறிய ஜனாதிபதி...

நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டபின்னர் சபை நடுவில் கூடிய ஆளும் தரப்பு எதிர்த்தரப்பு எம்.பிக்கள் சுமுகமாக உரையாடினார்கள்.

டளஸ் அழகப்பெரும எம்.பி ஆளும் தரப்பு இரண்டாம் வரிசையில் அமர்ந்திருந்ததோடு முதலில் அவரை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ கைலாகு கொடுத்து வாழ்த்தினார். அடுத்து அமைச்சர்களான மஹிந்த அமரவீர, கெஹெலிய ரம்புக்வெல்ல, மஹிந்தனந்த அலுத்கமகே எம்.பி ஆகியோர் கைலாகு கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தனர்.எதிரணியில் அமர்ந்திருந்த ரவூப் ஹக்கீம் எம்.பியும் அவரின் அருகில் சென்று வாழ்த்துத் தெரிவித்தார்.

எதிரணிப்பக்கமாக சென்ற பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் டளஸ் அழகப்பெரும ஆகியோர் அனுரகுமார திசாநாயக்கவுக்கு கைலாகு கொடுத்து தமது வாழ்த்துக்களை தெரிவித்தனர். மூவரும் சில நிமிடங்கள் பேசிகொண்டிருந்தனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பியான எம்.ஏ.சுமந்திரன்,ரிஷாத் பதியுதீன், மனோ கணேசன் உட்பட ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் பலரும் டளஸ் அழகப்பெருமவுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்ததை காணக் கூடியதாக இருந்தது.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் டளஸ்அழகப்பெரும எம்.பியும் நீண்டநேரம் சபையில் தரித்திருந்து சக எம்.பிக்களுடன் சமுகமாக பேசிக் கொண்டிருந்ததோடு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் அனுர குமார திசாநாயக்கவும் வெளியேறிச் சென்றது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி தெரிவு குறித்து...

வாக்களித்து வெற்றி பெற வைக்க வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் சார்பாக தான் இதனை கேட்டுக் கொள்வதாக சர்வதேச இந்துமத குரு பீடத்தின் தலைவர் சிவஸ்ரீ ஐயப்பதாச சாம்பசிவ குருக்கள் நேற்று தெரிவித்தார்.

குருபீடத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்து வந்த அரசாங்கங்கள் சகலதுமே தமிழ் மக்களது பிரச்சினைகளை தீர்ப்பதாக கூறி வந்தாலும் அவற்றில் பல தீர்க்கப்படாமலே உள்ளது.

குறிப்பாக அரசியல் தீர்வைக் காண தமிழ் மக்கள் ஆவலாக இருக்கிறார்கள். அதனை இந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுபவர் செய்யக் கூடியதாக இருக்க வேண்டும்.

அத்துடன் நாடு பொருளாதாரத்தில் மிகவும் பின்தள்ளப்பட்டு மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்வதற்கு படாத பாடுபட்டு வருகின்றனர். அதற்கு முதலில் தீர்வைக் காண வேண்டும். அதற்காக சர்வதேச சத்துடன் தொடர்பு கொண்டு பொருளாதார ரீதியாக நட்புறவு கொண்டு நாட்டை கட்டி எழுப்பக்கூடிய வல்லமை கொண்ட ஒரு தலைவரை தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளித்து தெரிவு செய்ய வேண்டுமெனவும் ஐயப்பதாஸ் சாம்பசிவ குருக்கள் கேட்டுள்ளார்.

பிரிட்டன் பிரதமர்...

முன்னாள் சமத்துவ அமைச்சர் கெமி படேனோக் நான்காவது இடத்தையும் பிடித்தனர்.

மீதமுள்ள நான்கு வேட்பாளர்களும் செவ்வாய்க்கிழமை மற்றொரு சுற்று வாக்கெடுப்பில் பங்கெடுத்தனர்.

நேற்று போட்டி களத்தின் வேட்பாளர்களின் எண்ணிக்கை இரண்டாகக் குறைக்கப்பட்டது.

கன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர்கள் பின்னர் இறுதிக் கருத்தைக் கூறுவார்கள்.

கடந்த வியாழன் அன்று நடைபெற்ற இரண்டாவது சுற்று வாக்கெடுப்பிலிருந்த இடங்கள் ஒரே மாதிரியாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியிலிருந்து வெளியேறிய பின்னர் கருத்து தெரிவித்த துகெந்தட், “எனது குழு, சக ஊழியர்கள் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக, அவர்களின் ஆதரவுக்காக நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

நாடு முழுவதும் எங்களுக்குக் கிடைத்த வரவேற்பைக் கண்டு நான் வியப்படைந்துள்ளேன்.

மக்கள் தூய்மையான தொடக்கத்துக்குத் தயாராக உள்ளனர், எங்கள் கட்சி அதை நிறைவேற்றி மீண்டும் அரசியலில் நம்பிக்கை வைக்க வேண்டும்” என கூறினார்.

ரணிலுக்கு எதிரான வழக்கு...

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியில்லாதவரென அறிவிக்குமாறு கோரி வினிவித பெரமுனவின் பொதுச் செயலாளர் நாகானந்த கொடிதுவக்கு இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

சட்ட மாஅதிபர் தரப்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா பூர்வாங்க ஆட்சேபனைகளை முன்வைத்தார்.

மேலும், பொருள், உண்மைகளை தவறான முறையில் மறைத்ததற்காக மனுதாரர் ஏற்கனவே தாக்கல் செய்த இதேபோன்ற மனு, உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டமையை அவர் சுட்டிக்காட்டினார்.

தேசியப் பட்டியல் வேட்புமனுக்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமிருந்து கட்சிச் செயலாளர்களால் பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு வாரத்திற்குள் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

எனினும் கட்டாய காலத்திற்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தமக்கு வழங்கிய அறிவித்தல்களுக்கு இணங்கத் தவறியதாக மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை பொருளாதாரத்தை...

பொருளாதார சவால்களுக்கு மத்தியில் பல முதலீட்டைக் கொண்டு வருமென்றும் உறுதியளித்தார்.

இதற்கிடையில், இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடி குறித்து கவனம் செலுத்த வேண்டுமென தமிழகத்தை சேர்ந்த கட்சிகள் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து அனைத்துக் கட்சிக் கூட்டம் இடம் பெற்றது.

இலங்கைத் தமிழர் 07 பேர்...

திட்டில் இறக்கி விட்டு படகோட்டிகள் தப்பி சென்றதையடுத்து தமிழக கடலோர பாதுகாப்பு பிரிவினர் அவர்களை மீட்டு , மண்டபம் கடலோர பாதுகாப்பு பிரிவு பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் வசித்த ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவரும், திருகோணமலை ஆனந்தபுரி பகுதியில் வசித்த ஒரு குடும்பத்தை சேர்ந்த நால்வருமே தமிழகம் சென்றுள்ளனர். பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி, இலங்கையில் இருந்து கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை 123 பேர் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

வாக்களிக்குமாறு வற்புறுத்தவோ,...

செய்திகள் வெளியாகின.

பாராளுமன்ற அலுவல்கள் சபைக் கூட்டத்தில் இவ்விடயம் எழுப்பப்பட்டபோது, சபாநாயகர், ஜனாதிபதித் தே ர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 20 ஆவது பிரிவின்ப டி . 1981 ஆம் ஆண்டின் 02 இலக்க சட்டத்தின் பிரகாரம் தேர்த லில் வாக்களிக்கும் எம்.பி.க்களை செல்வாக்கு செலுத்துவது அல்லது வற்புறுத்துவது வாக்களிப்பு தொடர்பான விதிகளை மீறுவதாக அமையும் .

இது ஒரு இரகசிய வாக்கெடுப்பு என் பதால், எம்.பி. ஒருவரின் வாக்குச்சீட்டை புகைப்படம் எடுக்க கட்டாயப்படுத்தினால் அவர்களுக்கு ஏழு ஆண்டுகள் பாராளுமன்ற அமர்வுக்கு தடை விதிக்கப்படுமென்றும் சபாநாயகர் அறிவித்துள்ளார்.

யாழ். நகரில் QR Code...

QR Code டை வாகன திறப்புக்களில் மாட்டி விடக் கூடியவாறு கீ டேக் வடிவில் தயாரித்துள்ளார். அதற்காக அவர் 600 ரூபா வரையில் அறவீடு செய்கிறார்.

அதே போன்று மற்றுமொருவர் அடையாள அட்டை போன்று QR Code டை வடிவமைத்துள்ளார். அதற்காக அவர் 300 ரூபா வரையில் அறவீடு செய்கிறார்.

நீதிமன்ற கட்டளையை....

சட்டவிரோதமாக நிறுவப்பட்டுள்ள அனைத்துக் கட்டுமானங்களையும் அகற்றுமாறு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் 14 ஆம் திகதி வியாழக்கிழமை உத்தரவு பிறப்பித்திருந்தது.

ஆனால் தற்போது குருந்தூர் மலையில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த கட்டுமானங்களை அகற்றுவது தொடர்பில் சிக்கல் நிலை இருப்பதாகவும் இந்த விவகாரம் தொடர்பில் தென்பகுதியில் கொந்தளிப்பு நிலை தோன்றியுள்ளதாகவும் இந்த கட்டளையை நடைமுறை படுத்தினால் இனங்களுக்குள் பிணக்குகள் ஏற்படலாமென தெரிவித்து முல்லைத்தீவு பொலிஸார் 18 ஆம் திகதி திங்கட்கிழமை நீதிமன்றத்தில் நகர்தல் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்தனர். நேற்று இது தொடர்பான வழக்கு விசாரணைநடைபெற்றது.

தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜென்ரல் மற்றும் பிரதிநிதிகள் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்காக ஆஜராகினர்.

யாழ். கதிர்காம யாத்திரிகர்கள் உகந்தைமலை வந்தடைவு

(காரைதீவு குறூப் நிருபர்)

யாழ். கதிர்காம பாதயாத்திரை அடியார்கள் நேற்று கிழக்கின் தென் கோடியில் உள்ள உகந்தை மலை முருகன் ஆலயத்தை சென்றடைந்தார்கள்.

கடந்த மாதம் நான்காம் திகதி யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட கதிர்காமம் பாதயாத்திரைக் குழுவினர் நேற்றுடன் 50வது நாளை பூர்த்தி செய்தார்கள்.

கடந்த 50 நாட்களாக நடந்து வந்த இந்த பாதையாத்திரை அடியார்கள் நேற்று உகந்தை மலை முருகன் ஆலயத்தில் தரிசித்தார்கள்.

அங்கு இரண்டு நாட்கள் தங்கி இருந்து வெள்ளிக்கிழமை காட்டுப்பாதை திறந்ததும் காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றார்கள். பாதயாத்திரை குழுவின் தலைவர் சி. ஜெயராசா தெரிவிக்கையில், கடந்த 50 நாட்களாக யாழ்ப்பாணத்தில் இருந்து நாங்கள் நடந்து வந்த போது எமக்கு உதவி செய்த ஒத்துழைத்த அனைத்து ஆலயங்களுக்கும் சமூக சேவையாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம். 132 பேர் எமது குழுவில் இடம் பெறுகின்றார்கள். வெள்ளியன்று (22)காட்டு பாதைக்குள் பிரவேசிக்கும் நாம் முருகன் அருளால் ஐந்து தினங்களில் கதிர்காமத்தை அடைந்து 29 ஆம் திகதி கொடியேற்ற திருவிழாவிலே கலந்து கொண்டு வீடு திரும்ப இருக்கின்றோம். அனைவருக்கும் நன்றிகள் என்றார்.

அஹதியா பாடசாலை ஆசிரியர்களுக்கான காசோலைகள் வழங்கி வைப்பு

(பாலமுனை தினகரன், அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்)

முஸ்லிம் சமய பண்பாட்ட லுவல்கள் திணைக்களத்தினால் அஹதியா பாடசாலை ஆசிரியர்களுக்கான வருடாந்த புத்தக கொடுப்பனவுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்ஷார் தலைமையில் நடைபெற்றது.

தற்போதைய சூழலில் அஹதியா பாடசாலைகளின் முக்கியத்துவம் எல்லோராலும் உணரப்பட்டு சிறப்பாக நடைபெற வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என பிரதேச செயலாளர் நிகழ்வின் போது கேட்டுக் கொண்டார்.

திகதி 18.07.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4820 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,697,880.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,679,356.80 — ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 9 7 1 9 7 2

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 850 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,774,680.00 — T — 01 19 22 35 — வெற்றி இலக்கங்கள் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 118,359,962.00

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் : 129 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,043,520.00 — இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 11 12 16 46 — விசேட இலக்கினம் மேஷம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,207,363.20

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1298 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,442,860.00 — வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 9 0 8 7 8 2 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,334,207.20

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3062 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,473,520.00 — ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 10 35 61 65 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,495,433.20

கோடி 26+ Mega POWER மேகா பவர் மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1168 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,293,000.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 261,330,002.00 — X 07 17 36 52 70 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தரி மன்றம் National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 — பெக்ஸ்: 011-4669475 — Email : info@nlb.lk — Web : www.nlb.lk

இலங்கை வங்கி
ஏலவிலை கோரல்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கு புகழ்பெற்ற உற்பத்தியாளர்களிடமிருந்து / வழங்குநர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்கள் இத்தால் கோரப்படுகின்றன.

ஏலவிலை கூறல் இல.	P/PROC/2022/170
பண்டம் / சேவைகளின் விபரம்	ATM, CDM, CRM இயந்திரங்களுக்கான அனல் மூலமாக பற்றுச்சீட்டு அச்சடிக்கும் சுருள்களை (Thermal Printer Roll) வழங்குதல்
மீளளிக்கப்படாத ஏலவிலை கூறல் கட்டணம்	ரூ. 6,400/= (பெறுமதி சேர் வரிகளுடன்)
சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏலவிலை கூறல் பிணைமுறியின் பெறுமதி	ரூ.274,500/=
ஏலவிலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித் திகதியும் நேரமும்	2022.08.02 1400 மணி வரை
ஏலவிலை கூறல் ஆவணங்களை விநியோகிக்கும் நேரம்	0900 மணி முதல் 1400 மணி வரை
ஏலவிலை கூறல் முடிவடையும் / திறக்கும் திகதியும் நேரமும்	2022.08.03 1000 மணி வரை
ஏலவிலை கூறல் திறக்கும் காலம்	ஏலவிலை கூறல் முடிவடைந்த உடன்

1. விலை கூறல் ஆவணங்களை, இலங்கை வங்கியின் தலைமையகக் காரியாலயத்தின் 14ஆம் தளத்திலுள்ள, சொத்துக்களும் சேகரிப்பும் பகுதியில், கடமை தினங்களில் 0900 மணி முதல் 1400 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விலைகூறல் விண்ணப்பங்களை இலங்கை வங்கியினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய வர்த்தக வங்கி ஒன்றிலிருந்து (இலங்கை வங்கி அல்லாத) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இவ்விலைகூறலுக்குப் பொருத்தமான பெறுமதியில் பெறப்பட்டதும் 2022.11.01 வரை செல்லுபடியானதுமான வங்கி உத்தரவாதத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். ஏலவிலை கூறல் பிணை முறிக்குப் பதிலாக பணவைப்புகள் / வங்கிக் கொடுப்பனவுக்கட்டளை / வங்கி உடனுண்டியல் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் வரையப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
3. ஏல விலை கூறல்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் விலை கூறல்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.
4. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா விலை கூறல்களையும் நிராகரிக்கும் அல்லது விலை கூறலின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
5. PCA 3 படிவமானது ஏலவிலை கூறலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
இல.01, "இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல.01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2204263, 2544310

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

கட்டிடங்கள் திணைக்களம்
கேள்விகளுக்கான அழைப்பு

அநுராதபுரத்திலுள்ள கிராமிய நூதனசாலையின் கூரை மற்றும் மின்சார வேலைகளுக்கான புதுப்பித்தல்கள்

(ஒப்பந்த இலக்கம்: RPC/Z03/2022/10)

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் மற்றும் 22.9 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவைக் கொண்டதுமான அநுராதபுரத்திலுள்ள (கட்டம் 1) கிராமிய நூதனசாலையின் கூரை மற்றும் மின்சார வேலைகளுக்கான புதுப்பித்தல் வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக் குழு (வலயம் 3) பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார்.

   நிர்மாணக் காலம் 120 நாட்கள்.
2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iii) ஆம் இலக்கம் மற்றும் 03/2020ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டிட நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கான C5, C6, C7, C8 அல்லது C9 தரம் அல்லது விசேடத்துவ நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கான SP 4 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

   பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை (Original Certificate of PCA 03) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். PCA 03 பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்பட மாட்டாது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் குருநாகல், வில்கொட வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 3), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 0372222437, தொலைமடல்: 0372222197
5. மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை (ரூபா 2,500.00) 2022-03-30ஆம் திகதி முதல் 2022-04-21ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் காலி, இல. 10, அப்பர் டிக்சன் வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 6), பிரதம பொறியியலாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. கேள்விகளை 2022.08.04ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (வலயம் 03), குருநாகல், வில்கொட வீதி முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குருநாகல், வில்கொட வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 3), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் கேள்வியில் பங்குபற்ற தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 77 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. அனைத்துக் கேள்விகளுடனும
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 340,000.00 ரூபா தொகைக்கு
   * 2022 நவம்பர் 16ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.2ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட

   கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பொறி. S.B.S. பண்டார,
கட்டிடங்கள் பணிப்பாளர் (பிராந்தியம் 3),
கட்டிடங்கள் திணைக்களம்,
2ம் மாடி, ''செத்சிறிபாய'', பத்தரமுல்லை.
www.buildings.gov.lk

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜூலை 20
புதன்கிழமை

ஜனாதிபதி தெரிவின் போது தமிழ் மக்களின் அபிலாஷைகளை கருத்திற்கொள்ளவேண்டும்

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்.விசேட நிருபர்

ஜனாதிபதி தெரிவின் போது பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை கருத்திற்கொண்டு தமிழ் கட்சிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் செயற்பட வேண்டுமென யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஜெல்சின் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், வட, கிழக்கு தமிழ் தரப்புகளுக்கு இது ஒரு முக்கியமான தருணம். இன்றைய காலகட்டத்தில் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை கருத்திற்கொண்டும் தமிழ் கட்சிகள் செயற்பட வேண்டும். நீங்கள் ஆதரிக்கும் வேட்பாளர் எமது தமிழ் மக்களின் கோரிக்கைகளையும் அபிலாஷைகளையும் ஏற்கும் தருணத்தில் நடுநிலையாக செயற்படாமல் அந்த வேட்பாளருக்கு முழு ஆதரவையும் நீங்கள் வழங்க வேண்டுமென மாணவர் சமூகமாக நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் மக்களால் தேர்வு செய்யப்பட்ட நீங்கள் தமிழ் மக்களின் உண்மையான தேவைகளை புரிந்து இருப்பீர்கள் என நம்புகிறோம். காலங்காலமாக தமிழ் மக்கள் உங்களுடைய வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றம் அடைந்து இருக்கின்ற வேளையில் இந்த சந்தர்ப்பத்தை நீங்கள் சரியான முறையில் பயன்படுத்தி பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும் செயலாற்றவேண்டும் என அவர்கள் தெரிவித்தார்.

வவுனியாவில் அதிகரிக்கும் சைக்கிள் திருட்டு

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் அதிகளவில் சைக்கிள் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக சைக்கிள் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எரிபொருள் வரிசை, வைத்தியசாலைப் பகுதி, நகரப் பகுதி என்பவற்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சைக்கிள்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

இந்நிலையில், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று திருடப்படும் காட்சிகள் சி.சி.ரி.டி கேமரா மூலம் வெளியாகியுள்ளன.

இதனை அடிப்பாடையாக கொண்டு வவுனியா பொலிஸார் விசாரணைகளை முனனெடுத்துள்ளனர்.

இதேவேளை, எரிபொருள் நெருக்கடி காரணமாக சைக்கிள்களின் விலையும் தற்போது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழில் நட்சத்திர ஆமை

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் அரியாலை கிழக்கு பகுதியில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை நட்சத்திர ஆமை ஒன்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த ஆமை அரிய இனம் என்றும், அதனை பாதுகாப்பாக வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இரு உயிர்களை காவுகொண்ட ரயில் கடவைக்கு பாதுகாப்பு வேலி

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா செட்டிகுளம் துடரிகுளம் பகுதியில் புகையிரத பாதுகாப்புக்கடவை அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. வெங்கல செட்டிகுளம் பிரதேச சபை இறம்பைக்குளம் ஈஷி மிஷனிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக பாதுகாப்புக் கடவை அமைக்கப்பட்டுள்ளது.

துடரிகுளம் பகுதியில் பாதுகாப்பற்ற புகையிரத கடவையை கடக்க முற்பட்ட போது இருவரின் உயிர் காவு கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் அப்பகுதிக்கு பாதுகாப்பான புகையிரதக்கடவை அமைத்து தருமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் அண்மையில் மேற்கொண்டனர் .

இந்நிலையில் நேற்றைய தினம் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்தன அழகக்கோனினால் பாதுகாப்பான புகையிரதக் கடவை அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இறம்பைக்குளம் ஈஷி மிஷன் இயக்குநர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேசபை தலைவர், செட்டிகுளம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, செட்டிகுளம் மேலதிக பிரதேச செயலாளர், கிராம அலுவலகர், சர்வ மத தலைவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர் .

பூநகரி வைத்தியசாலையில் குடிநீர் தட்டுப்பாடு

(முல்லைத்தீவு குறூப் நிருபர்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச வைத்தியசாலை குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளதாக பூநகரி பிரதேச சபை உறுப்பினர் இரா.செல்வராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பூநகரி வைத்தியசாலை குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளது. இந்நிலையில் எமது பிரதேச சபை தவிசாளரின் அனுமதியுடன் வைத்தியசாலைக்கு குடிநீர் விநியோகம் இடம்பெற்று வருவதாக பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். இதேவேளை, கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக பூநகரி பிரதேச வைத்தியசாலையில் குடிநீர் நெருக்கடிக்கு தீர்வுகள் எட்டப்படாத நிலையில் உள்ளன.

கடந்த காலங்களில் பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பூநகரி வைத்தியசாலை நீர் நெருக்கடிக்கு தீர்வுகள் காணப்பட வேண்டும் என கலந்துரையாடப்பட்ட போதும் இதுவரை தீர்வுகள் காணப்படவில்லை.

வைத்தியசாலையில் காணப்படுகின்ற நீர் நெருக்கடி காரணமாக உள்ளக நோயாளர்கள் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு பூநகரி வைத்தியசாலையில் காணப்படும் குடிநீர் நெருக்கடிக்கு விரைவான தீர்வுகள் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே பிரதேச மக்களின் கோரிக்கையாகவுள்ளது.

உள்ளக நோயாளர்கள் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு அனுப்பும் அவலம்

சிபாரிசின் பேரில் எரிபொருள் விநியோகம்

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் அத்தியாவசிய தேவைகளுக்காக 1000 லீற்றர் பெற்றோல் மாவட்ட செயலகத்தின் சிபாரிசில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தால் விநியோகிக்கப்பட்டது.

வவுனியா, பண்டாரவன்னியன் சதுக்கம் பகுதியிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று (18.07) பெற்றோல் எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது.

இதன்போது, வவுனியா மாவட்ட செயலகத்தின் சிபாரிசில் 4 பிரதேச சபைகள் மற்றும் ஒரு நகரசபை உள்ளடங்கிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு 400 லீற்றர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு 400 லீற்றர் பெற்றோல், கமலநலசேவைகள் திணைக்களத்திற்கு 200 லீற்றர் பெற்றோல் என 1000 லீற்றர் பெற்றோல் வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன், சனிக்கிழமை உள்ளூராட்சி மன்றங்களுக்கு 400 லீற்றரும், வங்கிகளுக்கு 250 லீற்றர், சிறைச்சாலை திணைக்களத்திற்கு 250 லீற்றர் என 900 லீற்றர் பெற்றோல் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கடந்த மூன்று தினங்களில் 1900 லீற்றர் அத்தியாவசிய தேவை நிறுவனங்களுக்கு என மாவட்ட செயலகத்தால் எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சிபாரிசு தவிர்ந்த மேலும் பலர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கொள்கலனில் பெற்றோல் பெற்றுச் சென்றதையும் அவதானிக்க முடிந்ததாகவும், இதன் காரணமாக தாம் எரிபொருள் பெற முடியாது மீண்டும் வீதியில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

கைதடி கலைவாணி வித்தியாலய மாணவர்களின் மதிய உணவு நிலையை கருத்திற் கொண்டு பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கை கிளையினர் .வீரசிங்கம் மங்கயற்கரசியின் ஞாபகார்த்தமாக பாடசாலை மாணவர்களுக்கான உலர் உணவுப்பொருட்களை வழங்கிவைத்தனர். (படம்: வேலணை குறூப் நிருபர்)

வவுனியா பல்கலைக்கழகத்தில் பற்சிகிச்சை சுகாதார பிரிவு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா பல்கலைக்கழகத்தில் பற்சிகிச்சை சுகாதார பிரிவு நேற்றுமுன் தினம் (18) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா பல்கலைக்கழகத்தில் 2000 மாணவர்களும், 500 மேற்பட்ட ஊழியர்களும் இருக்கின்ற போதும் பற் சுகாதாரம் தொடர்பான வசதிகள் காணப்படவில்லை. இதனை கருத்திற்கொண்டு அவுஸ்திரேலிய மருத்துவ உதவி நிறுவனத்தின் நிதியுதவியுடன் 3.5 மில்லின் ரூபா செலவில் பற்சிகிச்சை சுகாதார பிரிவு நேற்றைய தினம் நிறுவனத்தின் தலைவர் வைத்தியர் மனமோகன் மற்றும் வைத்தியர் கௌரி மனமோகனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அவுஸ்திரேலிய மருத்துவ உதவி நிறுவனத்தின் ஆரம்ப கர்த்தாவும், அதன் தலைவருமான வைத்தியர் மனமோகன், வைத்தியர் கௌரி மனமோகன், வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் மங்களேஸ்வரன், வவுனியா பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி வைத்தியர் சத்தியலிங்கம், கண் சிகிச்சை வைத்திய நிபுணர் மலரவன், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் மகேந்திரன், பற்சிகிச்சை நிபுணர் உதயகுமார், வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் நிலக்சன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன், பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதகுரு மீது தாக்குதல்

மன்னிப்பு கேட்ட பொலிஸ் அதிகாரி

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதகுரு ஒருவரை பொலிஸ் அதிகாரியொருவர் தாக்கியதாக தெரிவித்து மக்கள் நேற்றுமுன்தினம் (18.07) வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா நெளுக்குளம் நான்காம் கட்டை பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்தில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் மக்கள் நின்றுகொண்டிருந்த போதே மதகுரு தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து அங்கு நின்ற மக்கள் வவுனியா மன்னார் பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு தாக்கப்பட்ட மதகுருவிடம் பொலிஸ் பொறுப்பதிகாரி மன்னிப்பு கேட்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். இதனால் வவுனியா மன்னார் வீதி போக்குவரத்து சில மணிநேரம் பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் அங்கு பதற்ற நிலைமை காணப்பட்டதோடு நீண்ட நேரமாக வவுனியா, மன்னார் பிரதான வீதியின் போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. இதனை தொடர்ந்து பொலிஸ் பொறுப்பதிகாரி தாக்கப்பட்ட மதகுருவிடம் மன்னிப்பு கேட்டமையால் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

யாழில் வாள் வெட்டு, ஒருவர் படுகாயம், ஐவர் கைது

யாழ். விசேட நிருபர்

யாழில் இயங்கும் வன்முறைக் குழுக்கள் ஒன்றின் தலைவர் என கூறப்படும் நபரின் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு அண்மையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

படுகாயங்களுக்குள்ளான அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 10 பேர் கொண்ட வன்முறைக் கும்பலே தாக்குதல் நடத்தியது. தாக்குதல் நடத்தியவர்களில் ஐவர் கைது செய்யப்பட்டதுடன் வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு வாள் வெட்டுக்கு இலக்கான நபர் சென்று திரும்பிய போதே வீதியில் நின்ற 10 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் அவர் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்துள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்தியவர்களில் அளவெட்டியைச் சேர்ந்த ஐவர் தெல்லிப்பழை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு வன்முறை கும்பல்களுக்கு இடையிலான முறுகல் நிலையே இந்த வாள்வெட்டுத் தாக்குதலுக்கு காரணம் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழில் விபுலானந்தருக்கு சிலை

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் விபுலானந்தர் சிலை மற்றும் பாரதியார் சிலையை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

சுவாமி விபுலானந்தரின் 75 ஆவது குரு பூசை தினமான திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள சுற்றுவட்ட வளைவிலேயே இந்த சிலைகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

சைவ மகாசபை மற்றும் யாழ் மாநகர சபை இணைந்து இந்த நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் யாழ் மாநகர ஆணையாளர் இ.த. ஜெயசீலன், அகில இலங்கை சைவ மகாசபையின் தலைவர் பரா.நந்தகுமார், மாநகர சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கிழக்கின் குரல்

சுவாமி விபுலானந்த அடிகளாரின் 75வது சிரார்த்த தினம் அனுஷ்டிப்பு

காரைதீவில்...

உப்போடையில்...

(கல்லடி குறூப், காரைதீவு குறூப் நிருபர்கள்)

சுவாமி விபுலானந்த அடிகளாரின் 75 ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் நேற்று (19) மட்டக்களப்பில் பல்வேறு இடங்களில் அனுஸ்டிக்கப்பட்டது.

கல்லடி – உப்போடை மணிமண்டப வளாகத்தில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தரின் சமாதியில் அனுஷ்டிக்கப்பட்ட நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி தட்சயானந்தா ஜீ மஹராஜ், கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கணகசிங்கம், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி, சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை தலைவர் க.பாஸ்கரன், செயலாளர் ச.ஜெயராஜா மற்றும் சிவானந்தா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

அடிகளாரது சமாதிக்கு மலர் மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டதனைத் தொடர்ந்து மங்கல ஆராத்தி இடம் பெற்று, "வெள்ளை நிற மல்லி கையோ வேறெந்த மாமலரோ" பாடல் பாடி நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 75 ஆவது சிரார்த்த தின நிகழ்வும், அடிகளாரின் சிலை திறப்பு விழாவும் நேற்று (19) செவ்வாய்க்கிழமை காலை அவர் அவதரித்த காரைதீவில் நடைபெற்றன.

விபுலானந்தர் ஞாபகார்த்தப் பணி மன்றத்தினரின் ஏற்பாட்டில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு கண்ணகை அம்மன் ஆலய முச்சந்தியில் நிறுவப்பட்ட அடிகளாரின் திருவுருவ சிலையை மட்டக்களப்பு, இராமகிருஷ்ண மிஷன், உதவிப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் திருமுன்னிலை அதிதியாக கலந்து கொண்டு சுப வேளையில் திறந்து வைத்தார். சுவாமிகளின் "வெள்ளை நிற மல்லிகையோ.." என்ற பாடல் இசைக்க, அதிதிகளால் சுவாமிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டன.

திருமலை மாவட்ட செயலகத்தால் தோட்டபயிர்ச்செய்கை ஊக்குவிப்பு

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் உருவாக்கப்பட்டுள்ள நாற்று மேடையில் உற்பத்தி செய்யப்பட்ட தக்காளி கன்றுகள் நேற்று(19) அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரமவினால் உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

மாவட்ட விவசாயப்பிரிவு இந் நாற்று மேடையை பராமரித்து வருகின்றது. சேதனப்பசளைகளை பயன்படுத்தி நாற்று மேடை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவை வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டும் வருகின்றன.

இந்நிகழ்வில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம். குகதாசன், திட்டமிடல் பணிப்பாளர் கே. விஜயதாசன், சக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

பிரேதத்தை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை

(மண்டூர் தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு, செங்கலடி பஸ் தரிப்பிடமொன்றில் பல வருட காலமாக தங்கியிருந்து யாசகம் பெற்று வந்த வயோதிபர் ஒருவர் சுகவீனமுற்று ஏறாவூர் மற்றும் மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் (18) காலை மரணமடைந்துள்ளார்.

இவர் சுய நினைவோடு இருந்த போது தனது பெயர் ராஜா என்றும் வயது 72 என்றும் தெரிவித்திருந்தார். உன்னிச்சை புதூர் தனது ஊர் என்றும் தெரிவித்திருக்கிறார். இவரது பிள்ளைகளும் அந்த ஊரிலேயே இருப்பதாக அவர் கூறியிருந்தார். எனினும் நேற்று வரை எந்தவொரு உறவுகளும் இவரை தேடி வராததால், அவரது பிரேதம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கிறது.

அவரது உறவினர்கள் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தோடு தொடர்பு கொண்டு பிரேதத்தை அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கதிர்காம பாதயாத்திரைக்கான காட்டுப்பாதையை திறக்க ஏற்பாடு

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்கு செல்லும் பாத யாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை நாளை மறு தினம்(22) வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டு, மீண்டும் ஓகஸ்ட் மாதம் 05ம் திகதி மூடப்படுமென, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

கதிர்காமம் மற்றும் உகந்தைமலை முருகன் ஆலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா 29ம் திகதி ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும். கதிர்காமத்திற்கு பாதயாத்திரையாக செல்வோர் உகந்தைமலை முருகன் ஆலயத்தில் ஓரிருநாட்கள் தங்கியிருந்து குமண யால காட்டினூடாக கதிர்காமத்தை சென்றடைவது வழக்கம்.

22ம் திகதி வெள்ளிக்கிழமை காலை உகந்தைமலை முருகன் ஆலையத்தில் நடைபெறவிருக்கும் ஆரம்ப வைபவத்தையடுத்து காட்டுப்பாதை காலை ஆறு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை மாத்திரமே திறந்து இருக்குமெனவும் அக்காலப்பகுதிக்குள் மட்டுமே காட்டிற்குள் செல்ல யாத்திரிகர்கள் அனுமதிக்கப்படுவார்களெனவும் அவர் தெரிவித்தார்.

தனித்தனியாக அல்லது ஐந்து பேர் சேர்ந்து காட்டுக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். குறைந்தது 15 அல்லது 20 பேர் அல்லது அதற்கும் அதிகமான தொகையினர் சேரும் போது தான் உள்ளே செல்ல அனுமதி வழங்கப்படுமெனவும் தெரிவித்த அவர், யாத்திரிகர்கள் அனைவரும் தமது அடையாள அட்டைகளை கொண்டு வருவது கட்டாயமாமெனவும் தெரிவித்தார்.

இம்முறை ஆலயம் மற்றும் ஆலய சுற்றுச்சூழல் பிரதேசங்களில் சுகாதாரம் தொடர்பான கண்காணிப்புக்காக அம்பாறை, கல்முனை மற்றும் பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் பணிமனைகள் பொறுப்பாகவிருக்கும். அடியார்களுக்கு 24 மணி நேர வைத்திய முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொத்துவில் பொலிஸ் OIC க்கு எதிராக கிராம சேவையாளர் சங்கம் ஆர்ப்பாட்டம்

(நிந்தவூர் குறூப் நிருபர்)

பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக பொத்துவில் கிராம சேவையாளர்கள் சங்கம் நேற்று முன்தினம் (18) கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தது.

எரிபொருள் நிலையங்களில் கிராம சேவை உத்தியோகத்தர்களை புறக்கணித்து செயற்படுவதுடன், கடந்த சனிக்கிழமை (16) பொத்துவில் ஐ ஓ சீ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசைகளில் காத்திருந்த கிராம சேவகர் ஒருவரை தள்ளிவிட்டமை, அரச சேவை என்ற அடிப்படையில் பொலிஸார் மட்டும் வரிசையில் காத்திருக்காமல் சென்று எரிபொருளை பெற்றுக் கொள்வதும் அவர்களது உறவினர்களது வாகனங்களையும் கொண்டு வந்து முன்னுரிமைப்படுத்தி எரிபொருளை பெற்றுக் கொள்வது போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு அதனை கண்டித்தே இக் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதில் "பொலிஸாரின் உறவினர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு விசேட ஏற்பாடுகள் உண்டா", "எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொலிசாரின் அடக்கு முறைகளை வன்மையாக கண்டிக்கிறோம்" போன்ற சுலோகங்களை ஏந்திய வண்ணம் தங்களது எதிர்ப்பினைக் காட்டினர்.

ஆர்ப்பாட்ட இடத்திற்கு வருகை தந்த பொத்துவில், அக்கரைப்பற்று, திருக்கோவில் பொலிஸ் பிரிவுகளுக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எச்.கி.டபிள்யு. என். தேசப்பிரிய, அவர்களது கருத்துக்களை கேட்டறிந்து கொண்டதுடன், இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது எனவும், அரச சேவையில் உள்ளோருக்கு முறைப்படி எரிபொருள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பொலிஸார் முறைகேடாக நடந்து கொண்டமை தொடர்பில் விசாரணைகளை மெற்கொள்வதாகவும் தெரிவித்தார். இதன்போது, உதவிப் பிரதேச செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயிலிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

சிறுபோக நெல் அறுவடைக்காக

எரிபொருள் வழங்கிய அரசுக்கு விவசாயிகள் நன்றி தெரிவிப்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று மத்திய பல நோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பதிவு செய்த விவசாயிகள் தங்களின் சிறுபோக நெல் அறுவடைக்கு தயார் நிலையில் இருக்கும்போது அவர்களுக்கான டீசல் விநியோகம் ஞாயிற்றுக் கிழமை (17) கூட்டுறவுச்சங்க தலைவர் எம்.பீ.ஏ.ஹமீட் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க சுமார் 660 ஏக்கர் நில விவசாய காணிகளுக்கு 6600 லீட்டர் டீசல் முதற் கட்டமாக மத்திய பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தினூடாக வழங்கப்பட்டது.

அக்கரைப்பற்று விவசாயிகளுக்கு டீசலை முக்கியமான நேரத்தில் பெற்றுக் கொடுப்பதற்கு உதவிய அரசாங்கத்திற்கும் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலாளருக்கும் விவசாயிகள் நன்றி தெரிவித்துள்ளனர்.

அக்கரைப்பற்று மஹ்ழறத்துல் காதிரிய்யா ஜும்ஆ பள்ளிவாசலில் குத்புனா கௌஸுனா அஸ்செய்யித் அஷ்ஷேக் ஹல்லாஜுல் மன்சூர் நாயகம் காதிரி ஜிஷ்தி றிபாயி நக்ஷபந்தி ஜதுரூஸி றழியள்ளாஹு அன்ஹு அவர்களின் 18ஆவது வருட நினைவான கொடியேற்றம் கடந்த சனிக்கிழமை (16) மாலை ஏற்றப்பட்டது. இதில் உலமாக்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். (படம்: அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

களுவாஞ்சிகுடி பகுதியில் களவாடப்பட்ட பொருட்களுடன் ஐந்து சந்தேக நபர்கள் கைது

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

களுவாஞ்சிகுடி பகுதியில் களுவாடப்பட்ட பெருந்தொகைப் பொருட்களுடன் 5 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்தனர்.

நீண்ட நாட்களாக களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீடுகளில் களவாடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பொருட்களையும், தங்க நகைகளையும், பொலிசார் திங்கட்கிழமை (18) மாலை கைப்பற்றியதுடன் இது தொடர்பில் பிரதான சந்தேக நபர் ஒருவரும், களவுகளுக்கு உடந்தையாக இருந்ததாக கருதப்படும் சந்தேக நகர்கள் 4 வரையும் கைது செய்துள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிசார் நேற்று (19) தெரிவித்தனர்.

இதன்போது பேபி மேத்திரங்கள், தோடுகள், வீட்டு உரிமையாளர்களின் அடையாள அட்டைகள், கேஸ் சிலிண்டர்கள் 6, டி.வி.டி பிளேயர் ஒன்று, 6500 பணம் உள்ளிட்டவற்றையும் பொலிசார் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.பி.ரி.சுகந்தபாலசிவின் ஆலோசனையின் பெயரில், களுவாஞ்சிகுடி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ஜெயவர்தனவின் வழிகாட்டலில், களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பெறுப்பதிகாரி அபேயவிக்கிரமவின் தலைமைத்துவத்தின் கீழ் பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஜோய் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் சந்தேக நபர்களையும், களவாடப்பட்டதாகக் கருதப்படும் பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

எரிபொருளுக்கான வாகன வரிசையால் வர்த்தக நிலையங்களுக்கு பாதிப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக வீதி ஓரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களினால் வர்த்தக நிலையங்கள் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக கடந்த 03 வாரங்களுக்கு மேலாக வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், கார் மற்றும் லொறி என்பன நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு பொது மக்களும் பல்வேறு அசௌகரியகங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரதான வீதி மற்றும் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குச் செல்லும் வீதி மற்றும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் நீண்ட நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களினால் வைத்தியர்கள், சுகாதார ஊழியர்கள் ஆகியோர் வைத்தியசாலைக்கு செல்ல முடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வீதியின் இரு மருங்கிலும் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் வீதி விபத்துகளும் அதிகரித்து காணப்படுவதோடு பொது மக்கள் நடைபாதையும் தடைப்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பாக அக்கரைப்பற்று மாநகர சபை மற்றும் பொலிஸார் ஆகியோர் நடவடிக்கை எடுத்து வீதி ஓரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டு மக்களுக்காக தியாகம் செய்து போட்டியில் இருந்து விலகினேன்

லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்

நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே இருதரப்பினரும் ஒன்றிணைந்துள்ளதாகவும் .நாட்டு மக்களுக்காகவே தான் தியாகம் செய்து போட்டியில் இருந்து ஒதுங்கியதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியில் இருந்து மீள்வது சவால்மிக்கது என்றாலும் அச்சவாலை வெற்றிக் கொள்ளும் சிறந்த திட்டம் தங்களிடம் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தெரிவுக்கான வேட்பு மனு தாக்கலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். ஜனாதிபதி வேட்பாளர் டளஸ் அழகப்பெருமவும் இந்த ஊடக மாநாட்டில் பங்கேற்றார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சவால்மிக்க பயணத்தின் ஆரம்பத்தை வெற்றி கண்டுள்ளோம்.நாட்டு மக்களுக்காகவே நான் தியாகம் செய்துள்ளேன்.தனிப்பட்ட அரசியல் வெற்றி நாட்டின் வெற்றியாக மாற்றியமைக்கப்பட வேண்டும். நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு,அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஊடாக சிறந்த அரச நிர்வாகம்,அரச நிர்வாகத்தில் சிவில் மக்கள் பங்குபற்றல் மற்றும் அரச சபை உருவாக்கம் ஆகியவற்றை செயற்படுத்தும் நோக்கத்துடன் நாம் ஒன்றிணைந்துள்ளோம்.

எமது புதிய பயணத்திற்கு பெரும்பாலான அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன.நாட்டை பாதுகாத்து,மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது சகல தரப்பினரதும் பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது.

பொருளாதாரம் மற்றும் சமூக நெருக்கடியில் இருந்து மீள்வது சவால்மிக்கதாக உள்ள போதும் கட்டம் கட்டமாக சவால்களை வெற்றிக்கொள்ளும் தீர்வு எம்மிடம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் நாட்டிற்கு முன்னுதாரணமாக வேண்டும்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

நாட்டு மக்களின் பிரதான கோரிக்கையை பாராளுமன்றத்திலுள்ள பெரும்பாலானவர்கள் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை என ஜனாதிபதி வேட்பாளரான டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க ஒரு கட்சியாலோ அல்லது தனி தலைவராலோ முடியாது என்பதை சுட்டிக் காட்டிய அவர், சகல தரப்பினரும் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயல்படுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டத்தொகுதியில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

எதிர்க்கட்சிக்கும் ஆளும் தரப்பிற்கும் இடையில் கருத்தொற்றுமையுடன் கொள்கை ரீதியிலான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் கோரிக்கை என்ன என்பதை பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பாலானோர் விளங்கிக்கொள்வதில்லை.

நாட்டுக்காக ஒன்றிணையுங்கள் என மதத் தலைவர்கள் மற்றும் மதிப்பிற்குரியவர்கள் வலியுறுத்தியதை தொடர்ந்து ஒன்றிணைந்துள்ளோமே தவிர பதவி ஆசைக்காக அல்ல.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் மாலை வரை ஜனாதிபதி தெரிவிற்காக போட்டியிட தீர்மானித்திருந்தார்.

எமது தரப்பினர் சார்பிலும் நாட்டு மக்கள் சார்பிலும் எதிர்க்கட்சி தலைவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.எதிர்க்கட்சித் தலைவர் எதிர்பார்க்காத அர்ப்பணிப்பை செய்துள்ளார்.

பாராளுமன்றத்திற்குள் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் நாட்டிற்கு ஒரு முன்னுதாரணமாக அமைய வேண்டும்.

வெற்றி பெறுவதற்கான வாக்குகளை டளஸ் அழகப்பெரும பெறுவது உறுதி

முன்னாள் அமைச்சர் சன்ன ஜயசுமன

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

ஜனாதிபதி பதவிக்கான வாக்கெடுப்பில் வெற்றி பெறுவதற்கான வாக்குகளை டளஸ் அழகப்பெரும பெற்றுக் கொள்வார். அந்த வகையில் அவர் நூற்றுக்கு 50 வீதத்துடன் மேலும் 20 அதிக வாக்குகளை பெற்றுக் கொள்வார் என முன்னாள் அமைச்சர் சன்ன ஜயசுமன நம்பிக்கை வெளியிட்டார்.

அவரிடம் அரசியல் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதற்கும் நாட்டை பொருளாதாரத்தில் கட்டியெழுப்புவதற்குமான வேலைத் திட்டம் உள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டடத்தில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் அமைச்சர், அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடியே நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைக்கு முக்கிய காரணம். நாட்டில் அரசியல் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தி அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே தற்போதைய தேவையாக உள்ளது.

வேறு விடயங்கள் தொடர்பில் அதன் பின்னர் கவனம் செலுத்த முடியும்.

நாட்டில் கடந்த ஒன்றரை வருட காலமாக ஊழல் மோசடிகள் அற்ற அரசாங்கத்தை அமைப்பதற்கான வேலைத் திட்டம் அவசியம் என்பது தொடர்பிலேயே கருத்துக்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன.

தற்போது இடம்பெறும் நடவடிக்கைகளை பார்க்கும் போது நாம் நாட்டை டளஸ் அழகப்பெருமவிடமா? அல்லது சஜித் பிரேமதாசவிடமா? ஒப்படைக்க வேண்டும் என்பது தொடர்பில் கவனிக்க வேண்டியுள்ளது. ஊழல் மோசடிகளுக்கு அகப்படாத ஒருவராக நாம் டளஸ் அழகப்பெருமவை பார்க்க முடியும்.

இரண்டு கட்சிகளும் இணைந்து அரசமைப்பதே இன்றைய தேவை

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

பிரிந்து, பிளவு பட்டு நாட்டை ஆட்சி செய்யும் கலாசாரம் தோல்வி கண்டுள்ளது. இரண்டு கட்சிகளும் இணைந்து அரசாங்கம் அமைத்து அதன் மூலமான ஆக்கபூர்வமான வேலைத் திட்டங்களே இன்று நாட்டின் தேவையாக உள்ளதென வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டடத்தில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

நான் ஆறு கேள்விகளை பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரிய வசத்திடம் கேட்டிருந்தேன். அதற்கு அவர் எந்தவித பதிலையும் வழங்கவில்லை.

நான் தெரிவித்துள்ள கருத்தை அவர் நிராகரிப்பதாக தெரிவித்துள்ளார். அது தவறு. நான் தெரிவித்த கருத்தல்ல. நான் ஆறு கேள்விகளை அவரிடம் எழுப்பியுள்ளேன் இதுவரை அவர் அதற்கு பதில் வழங்கவில்லையென்பதே உண்மை.

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கான பேச்சுவார்த்தை கட்சிக்குள் நடந்ததென்று அவர் கூறியுள்ளார். அவ்வாறானால் அது எப்போது நடந்தது? யாரெல்லாம் அதில் கலந்து கொண்டனர்.? என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும். அதற்கு அவர் இன்னும் பதில் வழங்கவில்லை.

தற்போது ஜனாதிபதி வேட்பாளராக டளஸ் அழகப்பெரும தெரிவு செய்யப்பட்டுள்ளமை உங்கள் கட்சியின் தீர்மானமா? அல்லது தனிப்பட்ட தீர்மானமா? என ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர்:

இல்லை, எமது கட்சியின் பெரும்பாலானவர்கள் டளஸ் அழகப்பெரும மீது பெரும் எதிர்பார்ப்புடன் உள்ளனர். நாட்டு மக்களின் குரலுக்கு செவி சாய்த்தே நாம் பாராளுமன்றத்தில் செயற்பட வேண்டும். மக்கள் கருத்தே பாராளுமன்றத்தில் செயற்பட வேண்டும்.

தற்போது நாட்டு மக்களின் கருத்து என்னவென்பது தெளிவாகத் தெரிகிறது. நாட்டு மக்கள் மாற்றம் ஒன்றை எதிர்பார்க்கின்றனர். அதற்கு இது சிறந்த ஆரம்பமாக முடியும். புதுவிதமாக இந்த நாட்டை நிர்வகிக்க கூடிய வேலைத் திட்டங்கள் அவசியம். அதுவே மக்களின் தேவையும் அவசியமாகவும் உள்ளது.அதற்கு ஏற்பவே நாம் பாராளுமன்றத்தில் செயல்பட வேண்டும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். கட்சியின் பெரும்பாலானவர்களின் விருப்பத்திற்கிணங்கவே நான் ஜனாதிபதி வேட்பாளராக டளஸ் அழகப்பெருமவை முன்மொழிந்தேன் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

த.தே.கூட்டமைப்பின் ஆதரவும் தமது தரப்புக்கே என்கிறது ஐ.ம.ச

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவும் தங்களுக்கு கிடைக்குமெனவும் வீழ்ச்சியடைந்த தரப்புக்கு அவர்கள் ஆதரவு வழங்க மாட்டார்களெனவும் ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். ஜனாதிபதி டளஸ் மற்றும் பிரதமர் சஜித் தலைமையிலான சர்வ கட்சி அரசாங்கம் அமைத்து மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு துரிதமாக தீர்ப்பதற்கு தேவையானளவு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தெரிவு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர்,

நாட்டுக்காக அர்ப்பணிக்க வேண்டிய காலகட்டம் இது.இந்த நிலையில் எமது கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாட்டு நலனுக்காக ஜனாதிபதி தெரிவுக்காக போட்டியிடாமல் வாபஸ் பெற்றுக் கொண்டார். டளஸ் அழக்கப்பெருமவின் பெயரை சஜித் பிரேமதாசவே ஜனாதிபதி வேட்பாளராக பிரேரித்தது முக்கிய விடயமாகும்.

டளஸ் ஜனாதிபதி, சஜித் பிரதமர் என்ற இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. கலந்துரையாடல்களின் பின்னர் உடன்பாடு எட்டப்பட்டது. நாங்கள் அனைத்து கட்சிகளையும் இணைத்துக்கொண்டு சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றையே அமைக்க இருக்கின்றோம். சர்வ கட்சி அரசாங்கத்தின் ஆரம்ப திட்டங்களுக்கான நடவடிக்கைகளை ஒரு வாரத்துக்கு முன்னர் ஆரம்பித்திருக்கின்றோம். மக்களின் எதிர்பார்ப்புகளை ஒன்றிணைந்து நிறைவேற்றுவதற்கான வேலைத்திட்டத்தையே ஆரம்பித்திருக்கின்றோம். அனைத்து கட்சிகளையும் இணைத்துக் கொண்ட அமைச்சரவை ஒன்றை அமைப்பதே எமது திட்டமாகும் என்றார்.

(பா)

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, மஹிந்த, மைத்திரியின்

ஒத்துழைப்பை பெற்று நெருக்கடியை தீர்க்க வேண்டும்

லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்

தற்போதைய நெருக்கடி நிலையை தீர்ப்பதற்கு முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க,மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோரை ஒன்றிணைத்து செயற்பட வேண்டுமென தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா எம்.பி தெரிவித்தார்.

யார் ஜனாதிபதி? யார் பிரதமர்? என்பதை விட இவர்களின் பங்களிப்புடன் செயற்படுவதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முடியுமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். ஜனாதிபதி தெரிவுக்கான வேட்புமனு தாக்கலின் பின்னர் பாராளுமன்றத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்,

இந்த நெருக்கடியில் இருந்து மீள முன்னாள் ஜனாதிபதிகளின் அனுபவமும் பங்களிப்பும் இன்றியமையாதது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் பாராளுமன்றத்துக்குக் கொண்டு வர முடியுமாக இருந்தால் சிறந்தது. முன்னாள் ஜனாதிபதிகள் மூவரினதும் பங்களிப்புடன் செயற்பட்டால் நெருக்கடியை தீர்க்க வாய்ப்பாக அமையுமெனவும் அவர் குறிப்பிட்டார். (பா)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமாவை அடுத்து வெற்றிடமான ஜனாதிபதிப் பதவிக்கு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் நேற்று (19) பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்ட போது பிடிக்கப்பட்ட படங்கள்

நகர்வலம்

அனைவராலும் ஏற்றுக் கொள்ளும் ஜனாதிபதி, அரசாங்கம் அமைய வேண்டும்

சாணக்கியன் எம்பி தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப் படாவிட்டால் இலங்கைக்கு எதிர்காலமே கிடையாது என தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி ராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

எந்த ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் எடுக்கவுள்ளதாக குறிப்பிட்ட அவர், அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் நியமிக்கப்பட்டால் மாத்திரமே நாடு அரசியல் பொருளாதார ஸ்திரதன்மையை அடைய முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களில் எவரையாவது ஆதரிப்பதா அல்லது நடுநிலை வகிப்பதா என்பது தொடர்பில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு இதுவரை எந்த ஒரு இறுதி தீர்மானத்திற்கும் வரவில்லை.

நாட்டை மீண்டும் ஸ்திர நிலைக்கு கொண்டு வரவேண்டுமானால் அனைவரும் விரும்பக்கூடிய ஜனாதிபதி, பிரதமரைக் கொண்ட தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

அதனைவிடுத்து பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை வைத்துக்கொண்டு ஜனாதிபதி, பிரதமரை தெரிவு செய்தால் நாடு ஒருபோதும் ஸ்திர நிலையை அடைய முடியாது.

தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி எவரானாலும் அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் அவர்களுக்கு நாம் தெரிவிக்கவேண்டியதில்லை. அவர்களுக்கு அது நன்றாகவே தெரியும்.

எனவே தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை தீர்க்காமல் இலங்கைக்கு எதிர்காலம் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு தனவந்தர்கள் உதவ வேண்டும்

அஷ்ஷெய்க் இஹ்ஸானுத்தீன் (நளீமி)

பேருவளை விசேட நிருபர்

முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால மறுமலர்ச்சி கல்வித்துறையின் முன்னேற்றத்திலேதான் தங்கியுள்ளது. சமூகத்தின் கல்வி மறுமலர்ச்சிக்காக வசதிபடைத்த தனவந்தர்கள் தம்மாலான பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும். முதலில் இஸ்லாம் வந்த இடத்திலிருந்து எமது கல்வி மறுமலர்ச்சி அப்ரார் அமைப்பை அடியாகக் கொண்டு உருவாக முயற்சி எடுப்போம் என்று சீனன்கோட்டை பள்ளிச்சங்கம் மற்றும் ஜாமியதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா கலாபீடம் ஆகியவற்றின் நிர்வாகக் குழு உறுப்பினருமான அஷ்ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) தெரிவித்தார்.

பேருவளை அப்ரார் கல்வி நிலையம் 9ஆவது புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் விசேட பேச்சாளராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அப்ரார் கல்வி நிறுவனம் எமது சமூகத்திற்கு பாரியதொரு சேவையை செய்கின்றது. ஏனென்றால் கல்வி என்பது மார்க்கத்தோடு பின்னிப் பிணைந்தது. கல்வி இல்லாமல் மார்க்கம் இல்லை. மார்க்கம் என்பதுவே கல்வியன்றி வேறில்லை என்று சொல்லும் அளவிற்கு இரண்டும் ஒன்றோடு ஒன்று பிணைந்தது. "வாசிப்பீராக" என்றுதான் இஸ்லாத்தின் உயிராகிய வஹியே ஆரம்பமாகிறது. அந்த வஹியை சுமந்த எல்லோரும் அறிவு பாரம்பரியத்தின் அடையாளங்களாக இருந்தவர்கள்.

ஸஹாபாக்களாக இருந்தாலும் அவர்களை துயர்ந்தவர்களானாலும் எல்லோரும் அறிவு பின்புலத்துடன் இருந்தவர்கள் என்பதுதான் உண்மை. ஆடு மேய்த்த அரபு சமூகம் பல ஆற்றல்கள் கொண்ட சமூகம் என்பதை வரலாறு மறுக்கவில்லை. அந்த அறிவுக்கான பங்களிப்பைதான் இன்று "அப்ரார்" நிறுவனம் செய்து கொண்டு இருக்கிறது. இது காலத்தின் தேவையும்கூட. ஏனெனில், கல்வியில் இன்று பின்தங்கிய சமூகமாக எமது முஸ்லிம் சமூகம் இருக்கிறது.

இதன்காரணமாக முஸ்லிம் சமூகம் இன்று அனைத்தையும் இழந்து கொண்டிருக்கிறது. வணிகர்களாக இந்த நாட்டுக்கு வந்த முஸ்லிம்களின் கைகளில் இன்று வியாபாரத்தின் செல்வாக்கு இல்லாமல் போய்விட்டது,

ஒரு காலத்தில் மொத்த வியாபார சமூகமாக இருந்த முஸ்லிம் சமூகம் இன்று சில்லறை வியாபார சமூகமாக மாறிக்கொண்டு வருகிறது. நம்பகமான, இயற்கையான நாட்டு வைத்தியம் முஸ்லிம்களின் கைகளில் இருந்தது. பண்டைய ராஜாக்கள்கூட முஸ்லிம்களிடம் இருந்து பெற்ற மருத்துவம் இன்று முஸ்லிம்களிடமிருந்து இன்று கைநழுவிப் போய்விட்டது,

இன்று இழப்பதற்கு எதுவும் இல்லை என்கிற நிலைக்கு சமூகத்தின் நிலை மாறி விட்டது. இன்றைய முஸ்லிம் மாணவ சமூக நிலையும் ஆரோக்கிமற்றது. சாதாரண தரம், உயர்தரத்துடன் கல்வி வாழ்வை முடிக்கும் மாணவர்கள் அரசாங்கத்தின் தொழில்சார் கல்வித்துறையில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

புத்தளம் ஸாலிஹீனில் கலாசார நிகழ்வுகள்

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் ஸாலிஹீன் பள்ளி நிர்வாக அங்கத்தவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இஸ்லாமிய கலை கலாசார நிகழ்வுகள் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்ட மாணவ மாணவிகள் மிகவும் ஆர்வத்துடன் தமது நிகழ்வுகளை செய்து முடித்தனர்.

இக்கலை நிகழ்ச்சியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களுடைய விபரங்கள் நிர்வாக அங்கத்தவர்களினால் வெளியிடப்பட்டுள்ளன.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தூதரக ஏற்பாட்டில் உலருணவு பொதிகள்

சுமார் 3800 குடும்பங்களுக்கு வழங்கி வைப்பு

கொழும்பில் உள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தூதரகம், எமிரேட்ஸ் ரெட் கிரசென்ட் நிறுவனம் மற்றும் ஸாயித் தொண்டு மற்றும் மனிதாபிமான அறக்கட்டளையின் அனுசரணையுடன் உழ்ஹிய்யா நலன்புரித் திட்டத்தை இவ்வருடமும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது. இலங்கையின் பல பகுதிகளையும் உள்ளடக்கிய 27 வெவ்வேறு ஊர்களில் வறுமை கோட்டின் கீழுள்ள சுமார் 3,800 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இதன்போது உலர் உணவுப்பொதிகள் மேற்படி நிறுவனங்களினால் வழங்கி வைக்கப்பட்டன. இலங்கையிலுள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தூதரக அதிகாரி அஷ்ஷெய்க் அப்துல் நாஸர் (நளீமி) பயனாளிகளுக்கு இதன்போது உணவுப்பொருட்களை வழங்கி வைத்தார். மேற்படி தொண்டு நிறுவனம் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு எவ்வித பேதமுமின்றி மனிதாபிமான உதவிகளை வழங்கி வருவதாகவும் தூதரக அதிகாரி அப்துல் நாஸர் மேலும் தெரிவித்தார்.

இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜெர்மனிய தூதரக அதிகாரியுடன் சந்திப்பு

ருஸைக் பாரூக்

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் மற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் முப்தி முயீன் இலங்கைக்கான ஜெர்மனி நாட்டின் தலைமை கலாசார அதிகாரி கிறிஸ்டியன் செய்பேர்ட்டை சமீபத்தில் ஜெர்மனி தூதரகத்தில் சந்தித்தனர்.

இச்சந்திப்பில் இலங்கையின் தற்போதைய நிலவரங்கள் அதில் பிரதானமாக இளைஞர்கள் முகம் கொடுக்கும் சவால்கள், இளைஞர்களின் உயர் கல்வி, சிறு முயற்சியான்மை மற்றும் தலைமைத்துவ வாய்ப்புக்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

மேலும் இக்கலந்துரையாடலின் போது ஜெர்மனி நாட்டின் இலங்கைக்கான கல்வி தொடர்பான ஊக்குவிப்புகள், சிறு முயற்சியாண்மைகளுக்கான ஆதரவு நடவடிக்கைகள் மற்றும் ஜேர்மனியின் அரசியல் துறையில் இளைஞர்களின் வகிபாகம் என்பவைகளை தலைமை அதிகாரி கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் பின்னர், இரு நாடுகளினதும் உறவு இளைஞர்களின் ஊடாகவும் மேலும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர்காலங்களில் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில்

பெற்றோல் ஒரு லீற்றர் ரூ. 2000, ரூ. 3000க்கு விற்பனை

பொதுமக்கள் திண்டாட்டம்

கல்நேவ தினகரன் விசேட நிருபர்

அநுராதபுரம் மாவட்டத்தில் தற்போது எரிபொருட்களை பெற்றுக் கொள்வதில் பொதுமக்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். கல்நேவ,கெகிராவ, தமுத்தேகம, எப்பாவல ஆகிய பிரதேசங்களில் கறுப்புச் சந்தையில் ஒரு லீற்றர் பெற்றோல் ரூபா 2000 முதல் ரூபா 3000 வரையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் இந்த தொகையில் எரிபொருட்களை பெற்றுக் கொள்ளவும் மக்கள் ஆர்வம் காட்டி வருவதாகவும் தெரிய வருகின்றது. நான்கு, ஐந்து நாட்களுக்கு மேலாக ஐ.ஓ.சி.எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்துக் கொண்டு நின்ற போதிலும் எரிபொருட்களை பெற்றுக் கொள்ள முடியவில்லை எனவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.இச்சந்தர்ப்பத்தில் சிலர் ஒரு லீற்றர் பெற்றோல் இரண்டயிரம் ரூபாவுக்கும் மேலதிகமான தொகைக்கு விற்பனை செய்து வருவதாகவும் தெரிய வருகின்றது.

அத்தோடு மருத்துவ சிகிச்சைகளுக்காக மருத்துவமனைகளுக்கு செல்வதற்கும் எரிபொருள் இல்லாமல் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பொதுப் போக்குவரத்து வசதிகளும் குறைவாக காணப்படுவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

சில முச்சக்கர வண்டி சாரதிகள் பல நாட்களாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளுக்காக காத்துக் கொண்டு எரிபொருளை நிரப்பிய பின்னர் அதனை கூடிய விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும் தெரிய வருகின்றது.

கணவன் மனைவி தகராறு;

அதிக கோபத்தினால் கணவன் தூக்கிட்டு தற்கொலை

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் கல்கடவள பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் தனது வீட்டிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருட்கள் சிலவற்றினை எரித்து விட்டு தானும் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவமொன்று கல்கடவள மஹிலாமாவத்த பகுதி வீடொன்றில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 47 வயதுடைய அநுராதபுரம் கல்கடவள பகுதியை வசிப்பிடமாக கொண்ட ஓய்வு பெற்ற கடற்படை வீரர் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, சம்பவதினத்தன்று இரவு கணவனுக்கும் மனைவிக்குமிடையில் ஏற்பட்ட குடும்பப் பிரச்சினையால் அதிக கோபம் கொண்ட கணவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் எலயாபத்துவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உடப்பு பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (19) எரிவாயு சிலின்டரைப் பெற்றுக்கொள்ள மக்கள் வரிசையில் காத்திருந்தனர். சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட எரிவாயு சிலிண்டர்கள் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காக வீதியில் வைக்கப்பட்டிருந்த போது பிடிக்கப்பட்ட படம்.
படங்கள்: உடப்பு குறூப் நிருபர்

இடைநிறுத்தப்பட்டிருந்த கடுகதி ரயில் சேவை மீண்டும் ஆரம்பம்

வெலிகம தினகரன் நிருபர்

இடைநிறுத்தப்பட்டிருந்த கரையோர வாராந்த ரயில் வண்டிகளை பயணிகளின் வசதி கருதி மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. கொழும்பு _ பெலியத்தை மற்றும் பெலியத்தை கொழும்பு இடையிலான கடுகதி ரயில் வண்டியே இவ்வாறு ஆரம்பிக்கப்படவுள்ளது. இவ் ரயில் வண்டி சனி, ஞாயிறு மற்றும் அரச விடுமுறை தினங்களிலும் பயணிக்கவுள்ளது.

எதிர்வரும் 23ம் திகதி சனிக்கிழமை முதல் இவ் ரயில் வண்டி ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பில் இருந்து 6.05 மணிக்கு இக்கடுகதி ரயில் வண்டி பெலியத்தை நோக்கி புறப்படவுள்ளதோடு, பெலியத்தையிலிருந்து பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பை நோக்கி பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இக்கடுகதி ரயில் கடந்த 4 மாதகாலமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பெருந்தோட்ட தரிசு நிலங்களை விவசாயத்திற்காக கம்பனிகள் கொடுக்குமா?

வடிவேல் புத்திரசிகாமணி கோள்வி

தலவாக்கலை குறூப் நிருபர்

பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள தரிசு நிலங்களை விவசாயம் செய்வதற்காக பெருந்தோட்ட மக்களுக்கு பிரித்து வழங்க வேண்டும் என பாராளுமன்றத்தில் பேசப்பட்ட விடயம் வரவேற்கத்தக்கது. இது நடைமுறைக்கு வருமா? அரசாங்கம் தரிசு நிலங்களை தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என பெருந்தோட்ட கம்பனிகளுக்கு அரசாங்கம் அழுத்தம் கொடுத்தாலும் தோட்ட நிர்வாகங்கள் தரிசு நிலங்களை தோட்ட மக்களுக்கு வழங்குமா? என்ற கேள்வி எழும்புகின்றது என முன்னாள் நீதி சட்ட மறு சீரமைப்பு பிரதியமைச்சரும் முன்னாள் பெருந்தோட்ட மனித வள பொறுப்பு நிதியத்தின் தலைவருமான வடிவேல் புத்திரசிகாமணி தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக விவசாயத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். தொழிலாளர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள தரிசு நிலங்களை தோட்ட மக்களுக்கு பிரித்து கொடுக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் குரல் எழுப்பப்பட்டது. இது ஒரு நல்ல வேலைத்திட்டமாக இருந்தாலும் இது நடைமுறைக்கு வருமா? என்ற கேள்வி எழும்புகின்றது.

இன்று பெருந்தோட்டப் பகுதியில் தொழிலாளர்கள் வீடுகள் அல்லது தற்காலிக குடிசைகள் அமைப்பதற்கே காணி வழங்க மறுத்துவரும் தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்கள் விவசாயம் செய்வதற்கு காணி வழங்குவார்களா? கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அதிகரிக்கப்பட்ட 50 ரூபா சம்பளத்தையே தொழிலாளர்களுக்கு வழங்க மறுத்த பெருந்தோட்டக் கம்னிகள் தரிசு நிலங்களையா இலவசமாக வழங்கப் போகின்றார்கள்?

அதிகாரத்தில் இருக்கும் தொழிற்சங்க அரசியல் தலைமைகள் கட்சி ரீதியில் இல்லாமல் அனைத்து தொழிற்சங்க தலைமைகளும் ஒன்றிணைந்து ஒருமித்து அரசாங்கத்திற்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் அழுத்தம் கொடுத்து இந்த தரிசு நிலங்களை தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றார்.

கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக நான் வாக்களிப்பேன்

சாமர சம்பத் தசநாயக்க எம்.பி

பதுளை தினகரன் விசேட நிருபர்

பாராளுமன்றில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்கெடுப்பில் சுதந்திரக்கட்சியின் முடிவு தவறானது. நான் வாக்களிப்பேன் என்று பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஊவா மாகாண முதலமைச்சருமான சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தீர்மானத்தை மீறி வாக்களிப்பில் பங்கேற்கவுள்ளதாக சாமர சம்பத் தசநாயக்க கூறினார்.

மக்கள் வாக்கினால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், தாம் இந்த வாக்களிப்பில் வாக்களிக்கவுள்ளதாக அவர் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரும் உரிய திட்டங்களை முன்வைக்காமை காரணமாக, ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பில் தமது கட்சி வாக்களிக்காது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

இதே வேளை, 14 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அதிருப்தி அணியாக ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி செயற்பட்டு வந்திருந்த நிலையில் நால்வர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவையில் பொறுப்புக்களை ஏற்றதன் மூலம், சுதந்திர கட்சித் தரப்பில் பிளவு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது புதிய ஜனாதிபதி தேர்வில் கட்சி தீர்மானத்தை மீறி வாக்களிக்கப் போவதாக பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளதன் மூலம் அக்கட்சிக்குள் மேலும் பிளவு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நலன்புரி அங்கத்தவராக கம்பளை ஊடகவியலாளர் எஸ். லோகேஸ்வரன் நியமிக்கப்பட்டு இருந்தார், அவருக்கு மனித உரிமை பாதுகாப்பு அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு நேற்று கம்பளையில் நடைப்பெற்றது. மனித உரிமை பாதுகாப்பு மற்றும் நலன்புரி நிலையத்தின் தலைவர் எம்.எஸ்.எம் நசார் தலைமையில் அடையாள அட்டை வழங்கி வைக்கப்பட்டது.

படம் கம்பளை நிருபர்

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மதிலில் மோதி மாணவன் பலி

அலதெனிய உல்லதுபிட்டிய பிரதேசத்தில் பாடசாலை மாணவனொருவன் செலுத்திய மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் மாணவன் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் குறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றுமொரு நபரும் கடுங் காயங்களுக்கு உள்ளாகி பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த மாணவன், நுகவெல மஹா வித்தியாலயத்தில் கலைப்பிரிவில் கல்வி பயிலும் 17 வயது மாணவன் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல், மதிலொன்றில் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என அலதெனிய பொலிஸார் தெரிவித்தனர். மேலும் குறித்த மாணவனிடம் சாரதி அனுமதிப்பத்திரம் காணப்படவில்லை என்பதுடன், மாணவனும் அவருடன் பயணித்த நபரும் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் அனுமதிப்பத்திரம் இல்லாமல் மாணவனிடம் மோட்டார் சைக்கிளை வழங்கிய உரிமையாளருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்திய வள்ளலார் கருணைக் குழுவின் நிதி அனுசரணையில் ஹற்றன் அசோகாஸ் சேகரனின் ஏற்பாட்டில் கொட்டகலை வீ ஆசிரியர் ஒன்றியத்தினால் தெரிவு செய்யப்பட்ட 100 வறிய குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

படம் தலவாக்கலை குறூப் நிருபர்

இனைஞர் போராட்டத்தில் சிலர் குளிர்காய முற்படுகின்றனர்

கண்டி பிரஜைகள் சங்கம்

அக்குறணை குறூப் நிருபர்

தேசிய ரீதியில் இடம்பெற்று குறிப்பிடத்தக்க இலக்கை அடைந்த இனைஞர் போராட்டத்தில் சிலர் குளிர்காய முற்படுவதை அனுமதிக்க முடியாது என கண்டி பிரஜைகள் சங்கத்தின் மத்திய குழு அங்கத்தவர் ரேனுகா மர்ரியகொட தெரிவித்தார்.

கண்டி நகரில் இடம்பெற்ற ஆர்பாட்டம் ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,..

இந்த நாட்டை சீரழித்த கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியடிக்க இளைஞர்கள், யுவதிகள் மேற்கொண்ட நாடளாவிய ரீதியிலான பேராட்டங்களையடுத்து கோட்டாபய பதவியை இராஜினாமாச் செய்தார். இதற்கு இளைஞர் நுவதிகளின் பங்களிப்பு பாராட்டத்தக்கது. அத்துடன் அது இலங்கை வரலாற்றின் ஒரு பதிவாகும். ஆனால் சிலர் அதனைக் கொச்சைப்படுத்தியும் தமக்கு சாதகமாகவும் பயன்படுத்த முற்படுகின்றனர். அதனை அனுமதிக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

இப் போராட்டம் முற்றுமுழுதாக இளைஞர், யுவதிகளின் பங்களிப்பு என்பதை யாரும் மறுக்க முடியாதது என்றும் குறிப்பிட்டார்.

கதிர்காமம் பாதயாத்திரை சாமிமலை நகரில் இருந்து ஆரம்பம்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

கதிர்காமம் கொடி ஏற்றத்தை தொடர்ந்து மலையக பகுதிகளில் இருந்து பாதையாத்திரை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த பாதை யாத்திரை, மஸ்கெலியா நோர்வூட்,டிக்கோயா, ஹற்றன், கொட்டகல, தலவாக்கலை, லிந்துல, நானுஓயா, நுவரெலியா, பொரகஸ், ஹப்புதளை, பண்டாரவளை, வெள்ளவாய வழியாக கதிர்காமம் சென்றடைய உள்ளது.

தொடர்ந்து பத்து நாட்கள் இடம்பெறும் இந்த பாதை யாத்திரை ஆங்காங்கே ஆலயங்களில் தங்கி செல்ல ஏற்பாடு செய்துள்ளனர்.

இடையிடையே யாத்திரிகர்கள் இணைந்து கொள்ள முடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மாவனெல்ல பஸ் தரிப்பிடத்தில் கூரை இன்றி பயணிகள் அவதி

மாவனெல்ல பஸ் தரிப்பிடத்தின் கூரை காற்றில் அள்ளுண்டுச் சென்றதால் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் கடுமையான மழை மற்றும் வெயில் காலங்களில் பயணிகள் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த பஸ் தரிப்பிடத்தின் கூரை காற்றில் பறந்து பல மாதங்கள் ஆன நிலையில், அதனை புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகள் அவதானம் செலுத்த வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தவலன்தன்னையில் ஐ.ஒ.சிக்கு முன்னால் பெரும் வாகன நெரிசல்

நுவரெலியாபுஸ்ஸலாவை பிரதான வீதியின் தவலந்தன்னை நகரில் ஏற்பட்டுள்ள வாகன நெரிசல் காரணமாக நேற்றுக் காலை 08 மணி முதல் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தவலன்தன்னை நகரில் இயங்கும் ஐ.ஒ.சி எரிபொருள் நிலையத்திற்கு (19) காலை எரிபொருள் கொண்டுவரப்பட்டதையடுத்து எரிபொருளை பெற்றுக்கொள்ள வருகை தந்துள்ள வாகனங்கள் பல முறையற்ற வகையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பிரதான வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கொத்மலை பொலிசார் வாகனங்களை ஒழுங்குபடுத்தும் முயற்சியில் பல மணிநேரம் போராடி வருவதாகவும், நிலைமையை வழமைக்கு கொண்டுவர முடியாத காரணத்தால் கண்டி, புஸ்ஸலாவை பிரதேசத்திலிருந்து நுவரெலியா, நுவரெலியாவிலிருந்து கண்டி மற்றும் கொழும்புக்கு செல்லும் வாகனங்களும் நெரிசலுக்கு உள்ளாகியுள்ளன.

மேலும் தவலந்தன்னை ஐ.ஒ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முறைக்கேடாக எரிபொருள் விநியோகம் செய்யப்படுவதாகவும், குறித்த நிரப்பு நிலைய ஊழியர்கள் இன்றி, தமக்கு தேவையானவர்களை முன் நிறுத்தி வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆ.ரமேஸ்

இரத்தொட்டை பிரதேச மக்களுக்கு இந்திய நிவாரண பொருட்கள் வழங்கல்

மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளை மாவட்டத்தில் இரத்தொட்டை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 23 தோட்ட மக்களுக்கு இந்திய உலர் உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதற்கமைய கந்தேனுவர, மில்டன், பிடகந்த ஹுனுகள, கபரகள உட்பட 23 தோட்டங்களைச் சேர்ந்த 3258 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி என்ற அடிப்படையில் இவை பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட இரத்தொட்டை பிரதேச சபை உறுப்பினர் எஸ். எரோஷன் தலைமையில் உலர் உணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

எரிபொருள் தட்டுப்பாட்டால் வாழை செய்கையாளர்கள், வியாபாரிகள் நிர்க்கதி

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

எம்பிலிபிட்டிய மற்றும் மகாவலி திட்டத்தின் வளவ பிரிவின் வாழைச் செய்கையாளர்கள் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர். இப்பிரதேசத்தில் உள்ள வாழை தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் வாழைகளை கொள்வனவு செய்ய இப்பிரதேசத்துக்கு வாகனங்கள் வராதமையே காரணம் என வாழைச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் வருகை தராமையால் தமது உற்பத்திகள் வீணாவதால் பெரும் நஷ்டம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் தமது வியாபாரத்துக்கு அவசியமான எரிபொருளை முறையாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் வியாபாரத்தை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்
THINAKARAN
தினகரன்

கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

நீர் வழங்கல் அமைச்சு

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இல.	ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம்	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)	தேவையான விலைமனு பிணை	தேவையான தகைமை	VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா)	தொடர்பு கொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம்	இறுதித் திகதி மற்றும் நேரம்
	சிவில் கேள்விகள்						
01	ராகல / வலப்பனை நீர் வழங்கல் திட்டத்தின் புதுப்பித்தல் வேலைகள் ஒப்பந்த இல: **RSC-C/CE(O&M)/CIVIL/O&M/RAGALA-WALAPANE/2021/302**	4,000/- + VAT	ரூபா 40,000/-	கட்டிட நிர்மாணத் துறையில் C7 மற்றும் C8 தரத்தில் CIDA பதிவு	3.1 மில்லியன்	பிஒநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele:081-2386068, Fax: 081-2388027	03/08/2022 பி.ப. 2.00
02	வெலிகம தரைக்கீழ் நீர்த்தேக்கத்தின் மேல் தளத்தின் நீர்க் கசிவைத் தடுத்தல் ஒப்பந்த இல: **RSC(S)/P&C/C/WATER PROOFING WELIGAMA/RH/2022-49**	2,000/- + VAT	ரூபா 12,800.00	கட்டிட நிர்மாணத் துறையில் C8 மற்றும் C9 தரத்தில் CIDA பதிவு	1.30 மில்லியன்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele:041-2222105, Fax 041-2221329	03/08/2022 பி.ப. 2.00
	2022-06-29ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. குண்டசாலை நீர் வழங்கல் திட்டத்திலுள்ள வருமானமற்ற நீரைக் குறைப்பதற்கான ஒப்பந்தம். ஒப்பந்த இல: **RSC-C/CE/CIVIL/O&M/KUNDASALE/2022/04.** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-07-27ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.						
	வழங்கல் கேள்விகள்						
03	900 கி.கிராம் கொள்ளளவு சிலிண்டர்களில் 210 எண்ணிக்கையான திரவ குளோரினை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: **SUP&MM/CHEM/CHLORINE-01/2022/07**	12,500/- + VAT **	ரூபா 2,260,000/-	உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு	-	கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328, Fax: 011-2635885	10/08/2022 மு.ப. 10.00
	2022-06-29ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு (மேற்கு தெற்கு) 2022ஆம் வருடத்தின் இறுதி ஆறு மாதங்களுக்கு நீர்க் கட்டண பற்றுச்சீட்டுகளை அச்சிடுதல். ஒப்பந்த இல: **W-S/P&C/S/ WB(02)/ DGM/O&M/2022/39 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-07-28ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.						
	M&E கேள்விகள்						
04	தங்கொட்டுவ நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு Penstock வால்வுகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல் ஒப்பந்த இல: **RSC(NW)/M(O&M)-PUT/E&M/NRW/DAN/2022/08**	6,000/- + VAT **	ரூபா 755,000/-	உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு	7.52 மில்லியன்	பிஒநி (வடமேல்) அலுவலகம், தேநீவவச, தம்புள்ளை வீதி, குருநாகல Tele: 037-2223158, Fax: 037-2230086	10/08/2022 பி.ப. 2.00
05	பல்கலைக்கழக நீர் வழங்கல் திட்டத்திலுள்ள பல்கலைக்கழக நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு PAC Dosing முறைமையை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல: **RSC-C/M&E/S&I/PAC/RECH(UOP)/ UNIVERSITY/2022/82**	4,000/- +VAT	ரூபா 50,000/-	உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள்	-	பிஒநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele: 081-2386068, Fax: 081-2388027	03/08/2022 பி.ப. 2.00
06	பத்தேகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு Auto Coupling Type Wet Well மின்சாரத்தால் இயங்கும் நீரில் அமிழ்ந்தியங்கும் பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல: **RSC(S)/P&C/S/BACKWASHRECOVERY/ BADDEGAMA/RH/2022-09**	4,000/- + VAT	ரூபா 72,000.00	பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள்	4.80 மில்லியன்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele:041-2222105, Fax 041-2221329	10/08/2022 பி.ப. 2.00
07	பத்தேகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு இரசாயனக் கலவை பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல: **RSC(S)/P&C/M&E/CHEMICAL DOSING/BADDEGAMA/RH/2022-06**	6,000/- + VAT **	ரூபா 130,000.00	பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ்	8.70 மில்லியன்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele:041-2222105, Fax 041-2221329	10/08/2022 பி.ப. 2.00
	2022-07-13ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. இந்தக் கேள்வி பின்வருமாறு திருத்தப்படுகின்றது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். அம்பத்தலை நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியிலுள்ள Pulsator மற்றும் Pulsatube அலகுகளுக்கு 3 Phase Induction Squeal Cage மோட்டர்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல : **RPC/WP/G/AMB/M&E/SPF/2022/42**	2,000/-+ VAT	ரூபா 14,000/-	உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள்	1.4 மில்லியன்	பிரதிப் பொது முகாமையாளர் (மேற்கு – உற்பத்தி) அலுவலகம், தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம். Tele:0112418532, Fax:0112549199	27/07/2022 பி.ப. 2.00
	சேவைக் கேள்விகள்						
08	தெஹிவளை / கல்கிசை, ஜயவனடகம / கொலன்னாவ மற்றும் ஜா-எல / ஏக்கலை பிராந்திய முகாமையாளருக்கு தேர்ச்சியற்ற மற்றும் அரைத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: **GCWR/SERVICE/ REGIONS(D/M)(J/K)(J/E)/2022/13**	12,500/- + VAT **	ரூபா 544,000/- மற்றும் ஆவணத்தின் பிரகாரம்	ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு	-	கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328, Fax: 011-2635885	15/08/2022 மு.ப. 10.00
09	பியகம / சீத்தாவக்க பிராந்திய முகாமையாளருக்கு தேர்ச்சியற்ற மற்றும் அரைத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: **GCWR/SERVICE/REGIONS BIYAGAMA SEETHAWAKA/2022/14**	12,500/- + VAT **	ரூபா 501,500/- மற்றும் ஆவணத்தின் பிரகாரம்	ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு		கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328, Fax: 011-2635885	15/08/2022 மு.ப. 10.00
10	மாரஸ்ஸன நீர் வழங்கல் திட்டத்திலுள்ள அலுவலக வேலைகளுக்கான சேவையை பெற்றுக்கொள்ளல் மற்றும் அலுவலக வளவுகளின் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புகளுக்கான சேவை ஒப்பந்தம் ஒப்பந்த இல: **ප්‍රාදේම(ම)/ම.නැ/සේවා/ශ්‍රිහාන/මාරස්සන/2022/36**	6,000/- + VAT **	ரூபா 80,000/-	ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு	-	பிஒநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 கேள்வி முன்னோடிக் கூட்டம் 2022-07-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு குண்டசாலை (மத்திய கிழக்கு) முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.	03/08/2022 பி.ப. 2.00
11	கதிர்காமம் சாக்கடைத் திட்டத்தின் சாக்கடை உட்கட்டமைப்புகளின் பராமரிப்பிற்காக தேர்ச்சியற்ற தொழிலாளர்களை வழங்குதல் ஒப்பந்த இல: **RSC(S)/P&C/SERVICE/KATARAGAMA/ SEWERAGE/O&M/ 2022-73**	4,000/- + VAT	ரூபா 43,000/-	இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம்	4.70 மில்லியன்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele:041-2222105, Fax 041-2221329	03/08/2022 பி.ப. 2.00
12	பிஒநி (S) அலுவலகம் மற்றும் மாத்தறை வேலைத் தளத்திற்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் தொழிலாளர்களை வழங்குதல். ஒப்பந்த இல: **RSC(S)/P&C/SERVICE/WORKSHOP/RSC /MATARA/O&M/ 2022-72**	6,000/- + VAT **	ரூபா 53,000/-	தேர்ச்சியற்ற தொழிலாளர்களை வழங்குவதில் குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு	5.30 மில்லியன்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele:041-2222105 Fax 041-2221329	03/08/2022 பி.ப. 2.00
13	ஹபராதுவ பொறுப்பதிகாரி அலுவலகம் மற்றும் காலி பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல: **RSC(S)/P&C/ J/HABARADUWA/A.E OFFICE/O&M/2022-78**	4,000/- + VAT	ரூபா 21,000/-	ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்கும் துறையில் மூன்று வருடங்கள் அனுபவம் வாய்ந்தவர்கள் மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்கள்	2.10 மில்லியன்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele:041-2222105, Fax 041-2221329	03/08/2022 பி.ப. 2.00
	வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்						
14	GCWR பிரிவிற்கான அலுவலகப் பாவனைக்கு வேனை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல: **AGM (GCWRD)/AGM (GCWRD) OFFICE/HIRING/ VEHICLE/2022/15**	2,000/- + VAT	ரூபா 5,000/-	ஆவணத்தின் பிரகாரம்	கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328, Fax: 011-2635885		10/08/2022 மு.ப. 10.00
15	பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திலுள்ள (தெற்கு) தலைமை இரசாயனவியலாளர் பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல: **RSC(S)/HIRING/VAN/CHIEF CHEMIST/O&M/2021-113R**	2,000/- + VAT	ரூபா 5,000/-	ஆவணத்தின் பிரகாரம்	பிஒநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele:041-2222105, Fax 041-2221329		03/08/2022 பி.ப. 2.00
16	ஒரு வருட காலத்திற்கு இரத்தினபுரி நீர் வழங்கல் திட்டத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல: **RSC(Sab)/RM (Rat)/Ser/O&M/Rat/2022/17R**	4,000/- + VAT	10,000/=	ஆவணத்தின் பிரகாரம்	பிஒநி (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி. Tele: 045-2228274-6, Fax : 045-2228273		03/08/2022 பி.ப. 2.00
	2022-06-29ஆம் திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. உதவிப் பொது முகாமையாளருக்கு (மேற்கு - தெற்கு) மோட்டார் காரொன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல: **WS/P&C/H(01)/DGM/O&M/2022/31R-02.** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-07-28ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.						

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். (“**” எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

தலைவர்,
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.

தேசிய உப்பு லிமிட்டட்

விலைமனுக்களுக்கான அழைப்பு

வாடகை அடிப்படையில் வாகனமொன்றை வாடகைக்கமர்த்தல்

வாகனமொன்றை வாடகைக்கமர்த்துவதற்கான விலைமனுக்களை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக 2022 ஜூலை 01 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட மேற்போந்த விளம்பரம் தொடர்பாக பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் தற்போதைய சூழ்நிலை காரணமாக மேற்கூறப்பட்டுள்ள விலைமனுக்களை பெற்றுக் கொள்ளும் திகதியானது 2022.07.28 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

தலைவர்,
கொள்வனவுக் குழு,
தேசிய உப்பு லிமிட்டட்,
கைத்தொழில்கள் அமைச்சு,
561/3, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு-05.

மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

வ/ப பன்னில்பத்து பலநோக்குக் கூட்டுறவு சங்கத்திற்கு உரித்தான கஹவத்த, எந்தான, பஹமுனுபன்ன, தெமுவான, ஹொரஹின்எல்ல, மடலகம ஜனபதய, நஹல்வத்துர ஆகிய கிராமிய வங்கிகளில் 2018.01.01 முதல் 2021.03.31 வரை அடகு வைத்து, 2022.08.26 வரை மீட்டுக்கொள்ளப்படாத, அடகு நகைகள், 2022.08.27 அன்று மு.ப. 9.30 முதல் கஹவத்த வ/ப பன்னில்பத்து பலநோக்குக் கூட்டுவுச் சங்கத்தின் அலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பொது முகாமையாளர்
தொலைபேசி இல: 045-2271153/ 045-2270242

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவிற்கான கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை – 2023

2023 ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் 2023 டிசம்பர் 31ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியின் கீழ் லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்னை செய்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் என்னால் கோரப்படுகின்றன.

02. 2288 இலக்கத்தினையுடைய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் 2022.07.08ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட கேள்வி பத்திரங்கள் 2022.08.10 மு.ப. 10.30 மணிக்கு முன்னர் லுணுகலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபால் மூலமாக அல்லது நேரடியாக அனுப்புதல் வேண்டும். மேலும் அன்றைய தினம் திருப்திகரமான கொள்வனவாளர் முன்வராவிடின் கேள்விப் பத்திரம் மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அதற்கான விண்ணப்பங்கள் 2022.09.07ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

டி.எம்.என். திசாநாயக்க
பிரதேச செயலாளர்
லுணுகலை.

2022.07.18ஆம் திகதி
பிரதேச செயலகம், லுணுகலை.

அறிவித்தல்

உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்புச் சட்டம் (262ஆம் அதிகாரம்)

2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்பு (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்புச் சட்டத்தின் 66எ சகிதம் வாசிக்க வேண்டிய 66இ அத்தியாயத்தின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்

உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்புச் சட்டத்தின் (262வது அதிகாரம்) மூலம் திருத்தப்பட்ட 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன வாக்கெடுப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் 66எ சகிதம் வாசிக்க வேண்டிய 66இ அத்தியாயத்தின் விதிமுறைகளின் பிரகாரம் வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய நூபே ஹேவகே ரோசி ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் வடமத்திய மாகாணத்தின் அனுராதபுரம் மாவட்டத்தில் ரம்பேவ பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள தலைவர் பதவிக்கு தலைவரொருவரை தெரிவு செய்து நியமித்துக்கொள்ளும் செயற்பாட்டிற்கான கூட்டம் 2022-07-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ரம்பேவ சபை கூட்ட மண்டபத்தில் இடம்பெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

என்.எம்.ஆர். நிஷாந்த,
உள்ளூராட்சி ஆணையாளர்,
வடமத்திய மாகாணம்.

2022-07-18,
அநுராதபுரத்தில் அமைந்துள்ள
வடமத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தில்.

தேசிய உப்பு லிமிட்டட்

விலைமனுக்களுக்கான அழைப்பு

வெள்ளை நிற WPP பைகள்

வெள்ளை நிற WPP பைகளுக்கான விலைமனுக்களை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக 2022 ஜூலை 01 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட மேற்போந்த விளம்பரம் தொடர்பாக பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் தற்போதைய சூழ்நிலை காரணமாக மேற்கூறப்பட்டுள்ள விலைமனுக்களை பெற்றுக் கொள்ளும் திகதியானது 2022.07.28 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

தலைவர்,
கொள்வனவுக் குழு,
தேசிய உப்பு லிமிட்டட்,
கைத்தொழில்கள் அமைச்சு,
561/3, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு-05.

கேள்விக்கான அழைப்பு

உணவகத்தை குத்தகைக்கு விடல்

மாவட்ட பொது வைத்தியசாலை – எம்பிலிப்பிட்டிய

எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சொந்தமான உணவகத்தை, 2022.09.01 முதல் 2023.08.31 வரை ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. சகல கேள்விப் பத்திரங்களையும் ஏற்றுக்கொள்ளல் 2022.08.10ம் திகதி மு.ப. 10.00 இற்கு முடிவடைவதுடன் கேள்விகள் திறத்தல் அன்றே மு.ப. 10.30 இற்கு வைத்தியசாலை பணிப்பாளர் பணிமனையில் இடம் பெறும்.

02. சகல கேள்விப் பத்திரங்களும், தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, எம்பிலிப்பிட்டிய என்ற முகவரிக்கு, பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டியதுடன் கையோடு கொண்டு வந்து ஒப்படைப்பதாயின் பொறியிடப்பட்ட விலைமனுக்கள், கணக்காளர் பணிமனையில் இருக்கும் கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

03. சகல கேள்வி விபரங்களையும் விநியோகித்தல் 2022.07.20 முதல் 2022.08.09 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 இற்கு இடையிலான காலத்திற்குள் அரச வேலை நாட்களில் எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலை பணிமனையில் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அங்கு மீளளிக்கப்படும் ரூபா 20000.00 (இருபதாயிரம்) மற்றும் மீளளிக்கப்படும் ரூபா 1000.00 (ஆயிரம்) தொகையை செலுத்துதல் வேண்டும்.

04. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் கீழ்க்காணும் தொ.பே. இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே.இலக்கம் - 047-2230261/ 2230994

பெறுகைக் குழுவின் தலைவர்/ பணிப்பாளர்
மருத்துவர் ஆர்.ஏ.எம்.டபிள்யூ.எஸ். பண்டார
மாவட்ட பொது வைத்தியசாலை
எம்பிலிப்பிட்டிய
2022.07.20

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகார இராஜாங்க அமைச்சு

உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் - செயற்றிட்ட அடையாளம்: P 163305

ஊவா மாகாணம்

1. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. மாகாண செயற்றிட்டப் பெறுகைக் குழுவின் தலைவர் இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களின் (ஊவா மாகாணம்) சார்பில் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் ''1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் எண் 03" இன் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. ஆகையால், மொத்த மதிப்பு ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சினால் மட்டும் (இல. ரூபா 5,000,000.00) இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பதிவு சான்றிதழை (FORM PCA 03) விலைமனுதாரர் அந்தச் சட்டத்தின் 11வது பிரிவின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (http://www.drc.gov.lk/)
4. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு இயைபுடைய துறையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
5. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையில் (பிரிவு 5) வழங்கப்பட்டுள்ளன.
